
Thendral | VOLUME 26 | ISSUE 12 | NOVEMBER 2026 | TAMILONLINE.COM



தென்றல்™

A Monthly Magazine for Tamils living in North America

சார்லட் முத்தமிழ்ச் சங்கம்: தீபாவளி



பொன்னித்துறைவன்

முனைவர் மலையமான்

Spend LESS
Save MORE

MADRAS GROCERIES

Indian Super Market

- Wide Range of food Products
- Garden Fresh Vegetables
- Organic Vegetables & Products
- Courteous Customer Care
- Ample Parking Space
- Clean Environment



5438 Central Ave. Newark, CA 94560.
(510) 894-1431

1187, W.El Camino Real Sunnyvale, California.
(408) 746-0808

Pay with your Smartphone, when you shop with us

Pay | pay | SAMSUNG pay | SoftPay

Madras

Food Court





Madras Café's

South Indian Veg Restaurant

Oh its So Delicious!

"tastier than ever"
Stop by once
You Can't Stop you

Business Hours:
Tue - Fri : 8.30a.m - 2.30p.m | 5.30p.m - 10.00p.m
Sat-Sun : 8.30a.m - 10.00p.m | Monday holiday

1177, W.El Camino Real, Sunnyvale, CA 94087

408.737.2323



Breakfast at 8.30am

At the intersection of El Camino & Bernardo

www.madrascafe.us

BAY AREA'S MOST FAVORITE GROCERY STORE

NOW OPEN

PLEASANTON

INDIA

CASH & CARRY

4040 Pimlico Dr • Pleasanton • CA 94588

Hours of Operation: **Mon - Sun: 9:00am - 10:00pm** • **www.indiacashandcarry.com**

Other Locations

SUNNYVALE
1032 E El Camino Real, Sunnyvale, CA 94087
(408) 509-1756

FREMONT
39175 Farwell Dr, Fremont, CA 94538
(510) 792-7383

SAN JOSE
1138 S De Anza Blvd, San Jose, CA 95129
(408) 253-7384

FOSTER CITY
750 Alma Ln #115. Foster City, CA 94404
(650) 212-0608

In Bay Area over 25,000 families believe it brings good luck when they buy Gold & Jewelry from Manisha Jewelers

Manisha JEWELERS

Serving the community for over 25 years @ same location

Grand Re-Opening
Early September 2025

at our same location
We Welcome You to our Upgraded Store

Highest Stock,
Best Quality &
Best Price than any store in the Bay Area.



ALL NEW Stock
Latest & Most Modern Jewelry Designs
Excellent Selection of latest & uncut Diamond Jewelry



New Arrivals
World's Best Turkish Jewelery

Available World's best Jewelry in Variety, Design, Workmanship & Finishing

Check weight of Jewelery!
Our Weight-wise Price is the Best-in-Town

Tuesday - Saturday 11:00 AM to 7:30 PM
Sunday 11:00 AM to 7:00 PM
Closed Mondays

Our Motto
Quality of Gold

Famous for 22 Karat Jewelery

408.249.3898

1053 E. El Camino Real, #5
Sunnyvale, CA 94087
Fax: 408.249.3897

தென்றல்™

A Monthly Magazine for Tamils living in North America

November 2026 ■ Volume 26 ■ Issue 12



374, South Mary Avenue,
Sunnyvale CA 94086.
Ph: 408.245.0193 Fax: 408.715.2545
Email: thendral@tamilonline.com
website: http://www.tamilonline.com
Facebook.com/thendralmag

Publisher:	**C.K. Venkatraman**
Chief Editor:	**Madhurabharathi**
Associate Editors:	**Arvind Swaminathan**
	Sivakumar Natarajan
Contributing Editors:	**Kanthi Sundar**
	Saraswathi Thiagarajan
Design:	**B. Jeevamani**
Advisors:	**Chandra Bodapati**
	Prabakar Sundararajan
	Prabhu Venkates
	Gomes Ganapathi

To Advertise Contact
Ph: 408.245.0193
thendral@tamilonline.com

East Coast
Balaji Srinivasan
Saraswathi Thiagarajan
saraswathithiagarajan@yahoo.com

Chicago, Mid-west
Meena Suby
sumeego@gmail.com

Sacramento, California
Jayanthi Sridhar
Ph: 916.608.9533
jayanthis5@yahoo.com

Texas
Kathir Radhakrishnan
Ph: 214.227.9721
rkathir@yahoo.com

Michigan
Aravind Ramesh
karvanent@yahoo.com

THENDRAL
374, South Mary Avenue, Sunnyvale CA 94086.

Copyright @ 2006 THENDRAL (ISSN 1536-0865). All rights reserved. Reproduction in whole or part of any text, photography, or illustrations without written permission from the publisher is prohibited. The publishers assume no responsibility for unsolicited manuscripts, photographs, or illustrations. Views and opinions expressed in this publication are not necessarily those of the magazine and accordingly, no liability is assumed by the publisher thereof. Advertising Copy and artwork are the sole responsibility of individual advertisers.

உள்ளே:

☐ எழுத்தாளர்
பொன்னித்துறைவன் 3

☐ எழுத்தாளர் சிறுகதை
நாஸ்திகன் - பொன்னித்துறைவன் 6

☐ அலமாரி
"ஓ! மாம்பழமே!" - கல்கி 15

☐ சிறப்புப் பார்வை
முனைவர் மலையமான் - தென்றல் 22

☐ கதிரவனைக் கேளுங்கள்!
ஆரம்பநிலை நிறுவன யுக்திகள் -
கதிரவன் எழில்மன்னன் 31

☐ சிறுகதை
எது சுகம்? - வெங்கடேஷ்குமார் 36

☐ நிகழ்வுகள்
சார்லட் முத்தமிழ்ச் சங்கம்:
தீபாவளிக் கொண்டாட்டம் 43

☐ Thendral Events Calendar
November 2026 46

☐ சின்ன கதை
நொண்டிச் சாக்குகள் -
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா 50





தென்றல் பேசுகிறது

பணவீக்கம், வளங்கள் பற்றாக்குறை, வேகமாக மாறிவரும் டிஜிட்டல் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்க இயலாமை ஆகியவற்றால் ஏற்பட்ட அதிருப்தியின் விளைவாக உலக நாடுகளில் போராட்டங்கள் வெடித்து வருகின்றன. இந்த அதிருப்தியை இந்தியா சிறப்பாகக் கையாண்டுள்ளது. இத்தனை பெரிய மக்கள் தொகை இருந்தும் இதைச் செய்ய முடிந்திருப்பது பாராட்டத்தக்கது. அடிப்படைத் தேவைகள் முதல் வாழ்க்கைத் தரம் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்துதல், சாலைகள், ரயில்வே, வீட்டுவசதி, பாலங்கள், சுரங்கப் பாதைகள் போன்ற உள்கட்டமைப்பு, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு, அரசு மருத்துவமனைகள் மூலம் குறைந்த செலவில் அதிநவீன மருத்துவ கவனிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவான செயலாக்கம் ஆகியவற்றின் போதாமை பரவலாக இளைய தலைமுறையை உலகின் பல நாடுகளில் அதிருப்திக்கு ஆளாக்கி உள்ளது. இந்தச் சூழலிலும் ஏற்றுமதி, செமிகண்டக்டர், விண்வெளி, பாதுகாப்பு உபகரணங்கள், AI, சுற்றுச்சூழல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் இந்தியா கண்டுள்ள முன்னேற்றம் குறிப்பிடத் தக்கதாகும்.

□ □ □

"மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தீமை செய்யும் வல்லமையை செயற்கை நுண்ணறிவு 2030 வாக்கில் அடைந்துவிடக் கூடும்" என்று சொல்லியிருப்பது யார் தெரியுமா? ChatGPTயை உருவாக்கியுள்ள OpenAI நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சாம் ஆல்ட்மன்! அரசாங்கங்களும் பன்னாட்டுப் பாதுகாப்பு அமைப்புகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். நாம் இதைப் பேசிக்கொண்டிருக்கும் போது, Binance கிரிப்டோ நாணயச் சந்தையிலிருந்து $6.3 மில்லியன் மதிப்புள்ள XRP கிரிப்டோ நாணயத்தை ஹேக்கர் ஒருவர், செயற்கை நுண்ணறிவின் உதவியோடு திருடிவிட்ட அதிர்ச்சிச் செய்தி வந்திருக்கிறது. முன்னரே சில அரசாங்க இணையதளங்களின் பாதுகாப்பை உடைத்து AI ஏஜண்டுகள் நுழைந்துள்ளன. எதுவுமே AI-யின் ஊடுருவலுக்குத் தப்பமுடியாது என்கிற நிலை உருவாகி வருகிறது. உடனடி நடவடிக்கை தேவை. குதிரைகள் தப்பி ஓடியபின் லாயத்தைப் பூட்டிப் பயனில்லை.

□ □ □

சிறார் இலக்கியத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ள தமிழறிஞர் முனைவர் மலையமான் அவர்களைப் பற்றிய கட்டுரை, கல்கி எழுதிய "ஓ! மாம்பழமே!" என்ற சுவையான கட்டுரை, அருமையான சிறுகதை, எழுத்தாளர் பொன்னித்துறைவன் வாழ்க்கைக் குறிப்பு என்று பல அம்சங்களோடு தென்றல் உங்களை வந்தடைகிறது.

வாசகர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகள்.

தென்றல்

Reach communities Local & Nationwide effectively
ADVERTISE IN THENDRAL
The Pride of Asian Indian Publications - in our 26th year
408.245.0193 ● thendral@tamilonline.com

எழுத்தாளர்

பொன்னித்துறைவன்




பொன்னித்துறைவனின் இயற்பெயர் வி. கணேசன். தன் வாழ்நாளின் பெரும் பகுதியை பம்பாயில் கழித்ததால் 'பம்பாய் வி. கணேசன்' என்றும் அழைக்கப்படுகிறார். எழுத்தாளர் மட்டுமல்ல. கர்நாடக இசைப் பாடகர், இசை பயிற்றுநர். பொன்னித்துறைவன் 1934-ல் தஞ்சாவூரை அடுத்துள்ள பாபநாசத்தில் பிறந்தார். கும்பகோணத்தில் கல்வி பயின்றார். தமிழ், ஆங்கிலத்துடன் ஹிந்தி, சம்ஸ்கிருதம் ஆகியவற்றிலும் புலமை பெற்றார். 21 வயதில் மத்திய அரசுப் பணியில் சேர்ந்தார். இந்தியாவின் பல நகரங்களில் பணியாற்றி அனுபவம் பெற்றார். மும்பை பாபா அணுசக்தி ஆய்வு மையத்தில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். மணமானவர்.



தொகுப்பு:
அரவிந்த்

பொன்னித்துறைவன் கல்கியின் எழுத்தால் ஈர்க்கப்பட்டார். அறுபதுகளில் எழுதத் தொடங்கினார். முதல் சிறுகதை *கல்கி* சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. தொடர்ந்து பரிசுக் கதைகள், மலர்க் கதைகள் எனப் பல கதைகளை எழுதினார். பொன்னித்துறைவனின் கதைகள், தொடர்கள் பல இதழ்களில் வெளியாகின. மகரம் தொகுத்த *'காந்தி வழிக் கதைகள்'* நூலில், பொன்னித்துறைவனின் *'கங்கை எரிகிறது'* என்ற சிறுகதை இடம்பெற்றது. காந்திய நோக்கிலும், தத்துவப் பின்புலத்திலும் பல கதைகளை எழுதினார். இவருடைய பெரும்பாலான கதைகள் அக





> **நிறைவானவனுக்கு எழுதுவது, ஏன் பேசுவதுகூட அவசியமில்லை. எழுத்தாளன் எழுத்தை ஆள்பவனல்ல; எழுத்தால் ஆட்டி வைக்கப்படுபவன்.”**

விசாரணையையும், தத்துவப் பார்வையையும் முன்வைப்பவை. கேள்விகளை எழுப்பி வாசிப்பவர்களை யோசிக்க வைப்பவை.

எழுத்து பற்றிப் பொன்னித்துறைவன், “நிறைவில்லாத ஒரு மனம்தான் எழுத்தாகப் பிறவி எடுக்கிறது. உய்வுப் பிணக்கின் உற்பாதங்களால் மூச்சுத் திணறி வெட்டவெளி நோக்கித் தலை தெறிக்க ஓடுவதுதான் எழுதுவது. நிறைவானவனுக்கு எழுதுவது, ஏன் பேசுவதுகூட அவசியமில்லை. எழுத்தாளன் எழுத்தை ஆள்பவனல்ல; எழுத்தால் ஆட்டி வைக்கப்படுபவன்.” என்கிறார்.

பொன்னித்துறைவன் நன்கு இசை கற்றவர். மும்பையில் பல இசைக் கச்சேரிகளைச் செய்தார். பலருக்கு இசை பயிற்றுவித்தார். மும்பையின் பிரபல சபாக்களில் இவரது கச்சேரிகள் நடந்தன. கணேசனின் கச்சேரிகள் கச்சிதமான உச்சரிப்பு, தெளிவான குரல் மற்றும் பாரம்பரிய இசையுடன் சிறப்பான ஒத்திசைவைக் கொண்டிருந்தன. 80 வயதைக் கடந்தும் இனிய குரல் வளத்துடன் பல இசைக் கச்சேரிகளில் பாடிப் புகழ்பெற்றார் பொன்னித்துறைவன்.

தமிழின் குறிப்பிடத்தகுந்த எழுத்தாளர்களுள் ஒருவராக பொன்னித்துறைவன் என்கிற வி. கணேசன் அறியப்படுகிறார்.

Count on me for home loan help

- Buy a home
- Refinance your current home loan
- Take advantage of the equity you already have in your home
- Buy a second home or investment property

Contact me to get started.

KAVITHA SENTHILKUMAR
Financial Center Lending Officer
NMLS ID: 297121
925.389.3286 Cell
kavitha.senthilkumar@bankofamerica.com
mortgage.bankofamerica.com




Bank of America

Credit and collateral are subject to approval. Terms and conditions apply. This is not a commitment to lend. Programs, rates, terms and conditions are subject to change without notice. Bank of America, N.A., Member FDIC.

Equal Housing Lender. ©2017 Bank of America Corporation. HL-105-AD 04-2017 ARNMN9VD

Shruthi Swara Laya

Touch the future with Traditional Arts



All Are Welcome

Classes in Fremont
Please contact
Anu Suresh at
510.552.5824

Shruthi Swara Laya
School for Indian Music
annumanasa@gmail.com | 510.552.5824
www.shruthiswaralaya.com



Alcor Events

Ready to turn your dreams into reality?
Let's start planning your perfect event today with **"Alcor Events"**

We transform Your Celebrations into Timeless Memories.

From luxurious Indian weddings to grand celebrations of every kind, Alcor Events specializes in blending cultural traditions with unmatched modern elegance.

Your Dream Wedding ● Your Milestone Moments ● Your Corporate Grandeur - We bring it all to life, seamlessly.

DM us now for a **FREE Quote** or **WhatsApp** your dream event plans to **+91 76038 18005.**

Website: **www alcorevents.in** ● Email: **ceo@alcorevents.in**

SCAN ME

எழுத்தாளர் சிறுகதை

நாஸ்திகன்

அன்று இரவு சர்மா தூங்கவில்லை. மொட்டை மாடியின் ஓர் ஓரத்தில் நின்றுகொண்டு வானத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருத்தார். "சாமு பிழைக்க மாட்டான்" என்று ஜோஸியர் சொன்ன வார்த்தைகள் அவர் காதில் நாராசமாக இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தன. அந்த அவ வாக்குக்கு முத்திரை வைத்து, 'ததாஸ்து' சொல்வதுபோல் பூஜையறையில் அகஸ்மாத்தாக அவர் கண்ணில் பட்டு நெஞ்சைக் குலைத்த பகவத்கீதையின் வரிகள் வேறு அவர்முன் நர்த்தனமாடின. வேதத்தையெல்லாம் கரைத்துக் குடித்து, சிருஷ்டியின் ரகசியத்தையே கண்டுகொண்டு விட்டாற் போல் இத்தனை நாட்கள் இறுமாந்திருந்த அவர், இன்று நெருங்கிவரும் மகனின் மரணம் என்ற விசுவரூபத்துக்கு முன் கூனிக்குறுகி அற்பமான ஒரு துளியாக நின்று கொண்டிருந்தார். தெருநாயின் ஓலம், நீல வானத்தைக் கிழித்தாற்போல் உதிரும் தீப்பொறி, உத்தரத்தில் தொங்கும் பல்லியின் யதார்த்த வாசகம், இவை ஒவ்வொன்றும் அவர் உடலில் தனி உதறலை ஏற்படுத்தின. கொஞ்சம் அழுகை, கொஞ்சம் பிரார்த்தனை. கொஞ்சம் விரக்தி என்று விவேகத்தைத் தவிர மற்ற எல்லாம் சேர்ந்த கலப்படமாக அவர் உருகிக் கொண்டிருந்தார்.

திடீரென்று அவருக்கு என்ன தோன்றிற்றோ! மளமளவென்று முகம், கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு, திருநீறு அணிந்து, கிழக்கே பார்த்துத் தரையில் உட்கார்ந்து கொண்டார். மனத்துக்குள்ளேயே ருத்ர ஜபம் ஆரம்பமாயிற்று. மூடியிருந்த கண்களுக்குள் அடர்ந்த இருட்டின் அடர்த்தியில் ஒரொரு சமயம் ஒளிக்கீற்றுகள் பளிச்சிட்டுக் கிளை பிரிந்து ஓடுவது போன்ற தோற்றம் ஏற்படும். அப்பொழுதெல்லாம் அவர் உடல் சிலிர்த்துக் கொள்ளும். வெள்ளி முளைத்து, புள்ளினங்கள் கூவி இரவென்னும் இறப்பில் உலகம் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு எழும்போது கூட, சர்மாவின் நிஷ்டை கலையவில்லை. சுட்டெரிக்கும் எட்டு மணி வெய்யிலும் அவரைச் சுடவில்லை, நாட்டுப்பெண் அகல்யா மாடிக்கு வந்து பார்த்துவிட்டு, அவர் தபஸைக் கலைக்க விரும்பாமல் பிள்ளை பாலுவை வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, சாதத்தை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனதும் அவருக்குத் தெரியாது.



பொன்னித்துறைவன்

ஜோஸியர் அப்படி அப்பட்டமாகத் தனக்குத் தோன்றியதைச் சொன்னதற்குக் காரணமே சர்மாதான். சர்மாவின் பிள்ளைதான் சாமு என்று தெரிந்திருந்தால் சொல்லியிருப்பாரோ மாட்டாரோ! "தெரிந்தவர் ஜாதகம்" என்று சர்மா பொய் சொன்னதன் பேரில் ஜோஸியர் உண்மையைக் கூறும்படி ஆகிவிட்டது. அதைக் கேட்ட சர்மா அதிர்ந்து, வெலவெலத்துப் போகையில், ஜோஸியர் திடுக்கிட்டுக் கவலையுடன் என்னவென்று வினவ, விசும்பலுக்கிடையில் சாமு தன் மகன்தான் என்று சர்மா ஒப்புக்கொள்ள, பிறகு ஜோஸியர் ஜாதகத்தை மீண்டும் மேலும் கீழும் பார்த்து, தலையைச் சொறிந்து கொண்டே, "சனியின் வக்ர பார்வையை நான் கவனிக்கவில்லையே! உம் பிள்ளைக்கு ஒரு குறையும் வராது. கவலைப்படாதேயும்" என்று தேற்றியும், சர்மா உடல் குலுங்க அழுதுகொண்டே வெளியேறினார். நாளை மறுதினம் ஆபரேஷனை வைத்துக்கொள்வதா வேண்டாமா என்ற பெரும் போராட்டம் அவர் நெஞ்சைக் குடைய நேராகப் பூஜையறைக்குச் சென்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, விசித்து விசித்து அழுகையில் எதிரே தரையில் பிரிந்து கிடந்த கீதையின் வரிகள் பளிச்சென்று கண்ணில் பட்டன:

"காண்டீபா! நீ போரிட மறுத்து இங்கிருந்து ஓடி விட்டால்கூட, கௌரவ அழிவு என்னால் முன்னமேயே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. நான் அவர்களை முன்பே கொன்று விட்டேன். இறந்துவிட்ட அவர்களைத்தான் நீ மீண்டும் கொல்லப் போகிறாய்!"

வாயில் உத்தரீயத்தைப் புதைத்துக்கொண்டு சத்தம் வராமல் குலுங்கித் தீர்த்தார் சர்மா. கண்ணீரின் மங்கலில் எதிரேயிருந்த கிருஷ்ண விக்கிரகம் ஊஞ்சலாடுவது போன்ற பிரமை எற்பட்டது.

"கிருஷ்ணா! ஒரேயடியா என் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டியேடா! சாமு செத்துப் போயிடுவானா? என் புள்ளை பொழைக்க மாட்டானா? உன் வாக்குக்கு வேற என்னடா அர்த்தம்; கிருஷ்ணா? ஜோஸியன் சொல்லைவிட உன் வாக்கு ரொம்பக் கொடூரமாய் இருக்கேடா! என்னாலே தாங்க முடியாதுடா, தாங்கவே முடியாதுடாப்பா!"

மானசீகமாகக் குலுங்கிக் கொண்டிருந்தார் சர்மா. உடல் குலுங்கலும், கண்ணீரும் தவிர, சத்தம் வெளிவரவேயில்லை. வாய்விட்டுக் கதறி ரகளை பண்ணக் கூடிய வயதா?

உள்ளுக்குள்ளேயே மறுகி மறுகி வெம்ப வேண்டிய வயசு. ஸ்தானம், பொறுப்பு எல்லாம்.

பூஜையறை ஸ்தம்பித்து, சலனமற்ற சோக அவலத்தில் மூழ்கியிருந்தது.

❍ ❍ ❍

மோகா நைவேத்தியத்தை எடுத்துக் கொண்டு அகல்யா வரும் அரவம் கேட்டதும், கண்களைத் துடைத்து மூடி, தியானம் செய்வதுபோல் பாவனை செய்தார் சர்மா. அவருடைய பொய்ம்மை நிலை அவரையே குத்திக் குடைந்தது.

எவ்வளவு நாட்கள் இதை மூடி மறைக்க முடியும்? எனக்குத் தெரிந்தது அவளுக்குத் தெரிய வேண்டியது நியாயமில்லையா?

என் பிள்ளையைப் பற்றி முன்னாடியே தெரிஞ்சுக்கறதுக்கு என் மனசு அடிச்சுண்ட மாதிரி, கணவனைப் பற்றித் தெரிந்துகொள்ள அவள் இதயம் துடிக்காதா? நாளை மறுதினம் சாமுவுக்கு ஆபரேஷன் ஆகி, பிறகு அவனுக்குப் பிரக்ஞை திரும்பியோ, அல்லது திரும்பாமலோ யார் கண்டார்கள். எப்படியோ மூச்சுத் திணறி அவன் சாகும்போது. 'அம்மா குழந்தே! உன் புருஷன் செத்துப் போயிடுவான்னு எனக்கு அன்னிக்கே தெரியும்மா'ன்னு பீத்திக்கறதுதான் முறையா? அழுகையோ. கூக்குரலோ, யாராயிருந்தாலும் அனுபவிக்கிறதை அனுபவிச்சுத்தானே ஆகணும்? இன்னிக்கு இல்லைன்னா நாளைக்கு. எனக்குப் புத்திர சோகம். அவளுக்கு...? கிருஷ்ணா!'

சர்மா ஒரு கணம் யோசித்தார். ஜோஸியம் ஏன் பிசகாக இருக்கக் கூடாது? திறந்து கிடந்து கண்களில் பட்ட பகவத்கீதையின் வரிகள் எனக்குத்தான் என்று நான் ஏன் கற்பனை செய்து கொள்ள வேண்டும்?

இந்த க்ஷணத்தில் உயிருடன் இருக்கும் என் பிள்ளை இறந்து விட்டாற்போல் நினைத்துக்கொண்டு எதற்காக அழ வேண்டும்? ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து, என் பிள்ளை பிழைத்து நீண்ட காலம் ஜீவித்திருக்கும் பாக்கியம் ஏற்பட்டால்...? நாளை மறுநாள் நடக்கப் போகிற விஷயம் எனக்கு இன்றே தெரிந்துவிட்டதாக நினைத்துக் கொண்டு, என்னை நானே வருத்திக் கொள்வானேன்? நாளையை ஊடுருவிப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையே, வெறியே - ஓர் அகம்பாவம்தானே? இந்த ஊடுருவலில் நம்பிக்கை வைத்தால் ஆண்டவனிடத்திலிருக்கும் நம்பிக்கை தளர்ந்து விட்டது என்றுதானே அர்த்தம்? நம்மிடமிருந்து மூடி மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ரகசியத்தையெல்லாம் தெரிந்து கொண்டுவிட்டதாக நினைத்துக் கொண்டு, கொசுவுக்குப் பிளை புறப்பட்டாற்போல் தாங்க முடியாமல் தவிப்பானேன்?

இப்படிக் கேள்விக்கு மேல் கேள்வியாகப் போட்டுக் கொண்டு தம்மைத் தாமே உலுப்பிக்கொண்டிருந்தார் சர்மா. நைவேத்தியத்தை வைத்துவிட்டு நின்றுகொண்டிருக்கும் அகல்யாவின் ஞாபகம் வந்தது.

அவசர அவசரமாக இரண்டு அட்சதையையும், புஷ்பத்தையும் அள்ளிப் போட்டுவிட்டு ஒரு நமஸ்காரத்தையும், பண்ணிவிட்டு எழுந்தார். இலேசாக ஜுரம் அடிப்பது போன்ற ஒரு வேகமும் நடுக்கமும் உடலைக் கவ்வின. நடுங்கும் கால்களைப் பூமியில் பரவ வைப்பதே பெரும் பாடாயிருந்தது. முகமெல்லாம் முத்து முத்தாக வியர்த்து, கைகால்கள் ஜில்லிட்டன. நாட்டுப்பெண்ணை நேருக்கு நேர் பார்க்கவே அச்சமாக இருந்தது.

சர்மா அறையிலிருந்து வெளியேற வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டாள் மருமகள். அவளைக் கடக்கும்போது ஒரு விநாடி அப்படியே நின்றார் சர்மா. பிறகு சுவரைப் பார்த்தபடியே, "ஆஸ்பத்திரிக்கு யாரும்மா போயிருந்தா?" என்று கேட்டார்.

"நான்தான்..."

"ஏதாவது சொன்னானா?!"

"முடிஞ்சா உங்களை வரச் சொன்னார்."

"இதோ கிளம்பிட்டேனம்மா" என்று கிளம்பிய சர்மா, ஒரு கணம் நிதானித்து விட்டு மீண்டும் பூஜை அலமாரிக்குத் திரும்பினார். கீழே இருந்த நிர்மால்ய புஷ்பங்களை எடுத்து நடுங்கும் கரங்களுடன் அகல்யாவிடம் கொடுத்தார். அதை அவள் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு, குனிந்த தலை நிமிராமல் தலையில் சூடிக்கொள்கையில், சர்மாவுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு சமாளிக்க முடியாமல் திணறினார். சத்தம் வராமல் உடல் குலுங்கிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்ற அகல்யா, கிழவர் படும் வேதனையைக் காணச் சகியாமல், "பெரியவாளான நீங்களே இப்படி வருத்தப்பட்டா, சிறிசுகள் நாங்கள் என்ன செய்வோம்?" என்றாள்.

சர்மா திரும்பினார். முகமெல்லாம் வீங்கி, கண்கள் குழம்பிச் சிவந்து, தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. "என்னாலே தாங்க முடியல்லேம்மா" என்று கத்திவிட்டு, அப்படியே உட்கார்ந்து குழந்தைபோல் கேவிக்கேவி அழ ஆரம்பித்துவிட்டார்.

"இப்போ என்ன நடந்துடுத்து? எதுக்காக இப்படி அலட்டிக் கொள்றேள்? பகவான் கிருபையினாலே எல்லாம் நல்லபடியாத்தான் நடக்கும்" என்று அகல்யா சொல்லும் போதே அவள் குரல் தழுதழுத்து வார்த்தைகள் பிசிறிட்டு, கண்கள் குளம் கட்டின.

திடீரென்று என்ன நினைத்துக் கொண்டாளோ! "நமஸ்காரம் பண்றேன். உங்க வாயாலே. எனக்கு ஆசீர்வாதம் பண்ணுங்கோ" என்று கணீரென்று கூறினாள்: சர்மா வாயடைத்துப் போய், தீர்க்கமாக அகல்யாவின் முகத்தைப் பார்த்தார்.

ஆடாமல், அசையாமல் அவளை ஒரு கணம் பார்த்தார். பிலுபிலுவெனக் கேசச் சுருள்கள் விளையாடும் அகலமான நெற்றியின் நடுவே வட்டத் தீப்பிழம்பாயிருந்த குங்குமப் பொட்டு அவரைச் சுட்டெரித்தது. அத் தீப்பிழம்பின் நடுவே தேரோட்டியின் கைச்சவுக்கின் சொடுக்கில் துள்ளிப் பாயும் குதிரைகளின் பளபளப்பு, குளம்புகளின் உதைப்பில் எழுந்த புழுதிப் படலம், அப்படலத்தைக் கிழித்துக் கொண்டு சரம் சரமாய்ப் பாயும் அம்புகள், 'ஐயோ, ஐயோ' என்ற மரண ஓலம், 'கண்ணா, நான் மாட்டேன், நான் இதற்கு ஒப்ப மாட்டேன்' என்ற அர்ஜுனனின் கேவல், "முட்டாளே, கொல்பவன் நான், கொல்லப்படுவதும் நான், நீ ஓய்ந்து விட்டால் உலகமே ஓய்ந்து விடும் என்றா எண்ணுகிறாய்?" என்ற கண்ணனின், ஞானோபதேசம்...

சர்மா சிலையாக நின்று கொண்டிருந்தார். அகல்யாவின் சிரம் தாழ்ந்தது. உடல் வளைந்து தரையைத் தொட்டது.

"மஹராஜியா, தீர்க்க சுமங்கலியா இரும்மா!"

உதடுகளின் அசைவில் வார்த்தைகள் பொருளற்ற காற்றாய் வெளிவந்தன. விடுவிடென்று வெளியேறினார் சர்மா. கீதையின் திறந்த பக்கம் படபடவென்று அடித்துக் கொண்டது.

❍ ❍ ❍

கீதைப் பொருள்களினாலான சர்மாவின் உடலை, விரக்தி என்ற வேகம் ஆஸ்பத்திரிக்கு அடித்துச் சென்றது.

"அப்பாவா...?"

"ஆமாண்டா சாமு!"

"வருமுடியுமோ என்னமோன்னு நெனச்சேன்."

"குழந்தை சொன்னா. வந்துட்டேன்."

"அகல்யாவைச் சொல்றேளா? ஹூம்... எவ்வளவு நாளைக்குக் குழந்தையா இருக்க முடியும்?"

"அதோ, அந்தக் கட்டிலைப் பாருங்கோ. நாளைக்கு அந்தக் குழந்தைக்கும் 'ஹார்ட்' ஆபரேஷன். அதுமாட்டுக்கும் போறவா வரவாளையெல்லாம் வம்புக் கிழுத்துண்டிருக்கு. அதையே என்னாலே செய்ய முடியறதோ?"

சர்மா மேஜையிலிருந்த சாத்துக்குடியையே பார்த்துக் கொண்டிருந்தார். சாமு பேசிக் கொண்டே போனான்.

"குழந்தையா இருக்கிறது கஷ்டமில்லை. குழந்தையா ஆறதுதான் கஷ்டம். கஷ்டமென்ன, முடியாதுன்னே வெச்சுக்கலாம். அது நேத்தியைப் பத்தி, இன்னியைப் பத்திக் கவலைப்படறதோ என்னவோ, நிச்சயமா நாளையைப் பத்திக் கவலைப்படறதேயில்லே. 'எல்லாம் பகவான் செயல்'ங்கற ஞானத்திலேயே அது நாளையைப் பத்தி நிச்சிந்தையா இருக்கு? அதுதானே இல்லை. பகவானைப் பத்தியே அது நினைக்கிறதில்லே. அதனாலேயே அதுக்கு ஞானம் வந்துடறதோ என்னமோ! நாமதான் நாளைப் பொழுதுக்கு, பகவான் நமக்கு என்ன வச்சிருக்காரோன்னு இன்னிக்கிருக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் நாசமாயடிச்சுண்டிருக்கோம். நமக்கு பகவான்கிட்ட பக்தியா இருக்கு? பயம்னா இருக்கு!"

சாமு அடுக்கிக் கொண்டே போனான். எதை நினைத்துக் கொண்டு பேசினானோ, சர்மாவுக்கு எல்லாமே தமக்காகத்தான் கூறுவது போலிருந்தது. அவன் வார்த்தைகளின் பொருளை ஜீரணிக்க முடியாமல் தவித்தார்.

என்னால் வெல்ல முடியாததை என் மகன் வென்றுவிட்டானா? சாவுக்கு ஸ்வாகதம் கூறிக் காத்திருக்கும் யோகியாய் விட்டானா சாமு? "அழிவதும் நான், அழிப்பதும் நான்" என்ற காலத்தை வென்ற நிர்ணயத்துடன் ஒன்றிவிட்டானா என் பிள்ளை? சாமு! என் கண்ணே! நீ இறக்கப் போவது உனக்குத் தெரிந்து விட்டதாடா?

வெளிறியிருந்த சாமுவின் முகத்திலும் ஓர் அசாத்தியக் களை அரும்பியிருந்தது. எதையோவென்று விட்டாற் போன்ற பெருமிதத்தின் ரேகை படர்ந்து முகம் ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது.

"என்னப்பா, மௌனத்தில் மூழ்கிவிட்டீர்கள்? என்னைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களா?" என்றான் சாமு. அவன் குரலில் ஏளனம் கலந்திருப்பதாகத் தோன்றியது, சர்மாவுக்கு.

இருந்தாலும் விட்டுக் கொடுக்காமல். "நமக்குக் கவலைப்படறதுக்கு என்னடா அதிகாரமிருக்கு? 'மாகேலரா விசாரமு'ங்கற தியாகப் பிரும்மத்தின் பாட்டு உனக்கு மறந்து போச்சா? நல்லவா யாரையும் பகவான் கைவிட மாட்டார்..." என்றார்.

"அப்படிச் சொல்லுங்கோ! அந்த ஒரு நம்பிக்கை, நிச்சயமா திடமா

SINGLE STOP SOLUTIONS FOR ALL YOUR NEEDS

WE ARE READY TO HELP YOU

CGS
CONNECT GLOBAL SERVICES

VISIT US AT
www.ConnectGlobalServices.com
Support@ConnectGlobalServices.com
205-421-1523

OUR SERVICES:

- Property Management
- Travel and Tourism
- Medical Tourism
- Care Giver Services
- Other Services....



ChessKidsNation
Where Chess Champions Come From

Learn Chess openings, Middle game (Tactics, Strategies), and Endgame Techniques from a variety of experienced Chess Coaches from the comfort of your home.

Contact us to schedule a **FREE** evaluation and choose an online Chess Coach to match your level.

Visit **www.ChessKidsNation.com** to learn more about us and our students' achievements.

Subha Balagee
Contact@ChessKidsNation.com
205.421.1523

Swami Insurance Services



Ganapathy Swami
(Independent Licensed Insurance Agent)
510-590-2144*
ganapathy_94539@yahoo.com

SIS

Life Insurance
Health Insurance
Medicare Plans
Long Term Care

CA Lic#: 0C74438
This is a solicitation for insurance.
**Calling this number will direct you to a Life & Health Insurance Agent*



தெய்வத்திரு
திருமுருக
கிருபானந்தவாரியார்
சுவாமிகளின்
மகத்துவமிக்க
சொற்பொழிவுகளை
கண்டு கேட்டு
இன்புற வேண்டுமா?

JioSaavn Spotify
WYNKMUSIC Listen on MUSIC
YouTube Music amazon music

மேற்காணும் தளங்களில் பார்த்து, கேட்டு மகிழுங்கள்!


குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்
132/107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-2845 7666 Email : guhashri@gmail.com
www.variyarswamigal.com

Reach communities Local & Nationwide effectively

ADVERTISE IN THENDRAL

The Pride of Asian Indian Publications - in our 25th year

408.245.0193 ● thendral@tamilonline.com



போலியில்லாம இருந்ததுன்னா, நமக்கு என்னிக்குமே கவலை கிடையாது. ஆனா, ஆத்துலே ஒரு கால், சேத்துலே ஒரு கால் இங்கறமாதிரி பாதி பகவான், பாதி நான் என்று நினைக்கிற போதுதான் எல்லா அவஸ்தையும் வரது... அது போகட்டும், ராத்திரி அவ வரும்போது நல்ல ரஸமா, கொத்தமல்லியைக் கிள்ளிப் போட்டுக் கொண்டுவரச் சொல்லுங்கோ."

"ஏண்டா, நாளைக்கு ஆபரேஷன். இன்னிக்குச் சாப்பிடலாமா?"

"பரவாயில்லை. ஆபரேஷன் நாளன்னிக்குத்தான்னு டாக்டர் சொல்லிட்டார்."

"அப்பாடி!" என்று ஒரு புது ஜன்மத்தையே பையனுக்கு விலைக்கு வாங்கிக் கொடுத்துவிட்டாற்போல் நிம்மதியான பெருமூச்சுடன் வெளியேறினார் சர்மா.

❍ ❍ ❍

மறுநாள்...

மொட்டை மாடியில் மாமனாரின் நிஷ்டையைக் கலைக்காமல், பாலுவை வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, ஆஸ்பத்திரியை அடைந்த அகல்யா கணவனுடன் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தாள். சரியாகப் பதினோரு மணிக்கு அவள் ஊட்டிய சாதத்தை அணு அணுவாக ரசித்துச் சாப்பிட்டுவிட்டு, தூங்கப் போகும் குழந்தையைப் போல் அவள்

மடியில் தலை வைத்து, அந்த ஸ்பர்ச சுகத்திலேயே மீளாத் துயிலில் ஆழ்ந்தான் சாமு.

ஒத்திப் போடாமல் இருந்திருந்தால் ஆபரேஷன் இந்த நேரத்துக்குத்தான் முடிந்திருக்க வேண்டும்.

மூர்ச்சித்து விழுந்த அகல்யாவையும், சாமுவையும் ஒரே காரில் வீட்டுக்கு எடுத்து வந்தார்கள். உறவினர்களெல்லாம் குழுமி, வீடு இரண்டுபட்டது.

மொட்டை மாடியில் நிஷ்டையிலிருந்த சர்மாவுக்கு விழிப்பு வந்தது. விஷயத்தையும் ஊகித்துக் கொண்டார். "இது என்னைப் பாதிக்காது" என்ற அலட்சியம் அவர் விழி வீச்சில் தெறித்தது. நிதானம் இழக்காமல் கம்பீரத்துடன் அவர் பாதம் ஒவ்வொரு படியாக மிதித்து அவரைக் கூடத்துக்குக் கொண்டு வந்தது. அப்பொழுதுதான் நினைவு திரும்பிய அகல்யா இவரைக் கண்டவுடன் 'ஓ'வென்று அலறிக் காலில் விழுந்தபோதும் அவர் கம்பீரமாகவே நின்று "கவலைப்பட்டு அழறதுக்கு நமக்கு அதிகாரமில்லேம்மா" என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார். ஒவ்வொருவர் ஒவ்வொன்றைச் சொல்லித் துக்கம் விசாரித்தும் இவர் எதையுமே லட்சியம் செய்யாமல் நகர்ந்து கொண்டேயிருந்தார். ஓரத்தில் நின்று கொண்டிருந்த ஜோஸியரின்மீது இவர் பார்வை விழுந்ததும் சாரைப்பாம்பு போல் அவரை நோக்கி விரைந்து அவர் தோள்களைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி, "ஓய் ஜோஸியரே! நீர் சொன்னது பலிச்சுடுத்துன்னு நெனச்சுண்டு கர்வம் பிடிச்சு அலையாதேயும். ஜெயிச்சது யார் தெரியுமா? நான்தான்யா, இந்த சர்மாதான். என் கண்ணைப் பாரும். அதிலே ஒரு சொட்டுக் கண்ணீர் இருக்கா? ஜெயிச்சது யார் ஓய்? செத்துப் போயிருக்கிறது என் புள்ளையாண்டான்யா... நான் அழறேனா பார்த்தீரா? அதுக்கு ஞானம் வேணும்யா. ஜோஸியரே, அதுக்கு ஞானம் வேணும்னேன்! புரிஞ்சுதா? முக்காலத்தையும் உணர்ந்த நீர் உம் பிள்ளை இறந்து போனால் இப்படி இருப்பீரா? நீர் வெறும் ஜோஸியன், நான் ஞானி தெரிஞ்சுக்கும்!" என்று கூறி அவர் தோள்களை இன்னொரு முறை உலுக்கிவிட்டு, நேரே சாமுவைக் கிடத்தியிருந்த இடத்துக்குப் போகும்போது - பேரன் பாலு இவர் கையில் ஒரு காகிதத்தைத் திணித்தான். சர்மா ஓர் அலட்சியப் புன்னகையுடன் அதைப் படித்தார்.

"அப்பா! அகல்யா எப்படியோ சமாளித்துக்கொண்டு விடுவாள். ஏனெனில் அவள் பெண். சாதாரண சஞ்சலங்களுக்கே அழுகை என்ற உயர்ந்த - கைகண்ட - மருந்து அவர்களிடம் எப்பொழுதும் உண்டு. தாங்க முடியாத கவலையென்றால் அவர்களுக்குச் சீக்கிரம் பைத்தியம் பிடித்துவிடும். பிறகு கவலை ஏது? எல்லாவற்றையும் விட, போலிக் கலப்பில்லாத, உறுதியான தெய்வ நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு.

நாம் - ஆண்களைச் சொல்கிறேன் - அப்படியில்லை. நீங்கள் ஜோஸியனைத் தேடி ஓடியதையும், கீதையைக் கட்டிக் கொண்டு அலறியதையும், உங்கள் துக்கத்தைப் பிறருக்குக் காட்டிக் கொள்ளாமல் நீங்கள் தவித்த தவிப்பையும் பற்றி அகல்யா என்னிடம் சொன்னாள். நீங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள். கொஞ்சம் பொறுத்திருக்கலாம்... உங்கள் செய்கை எனக்குப் பழைய

சம்பவமொன்றை ஞாபகமூட்டியது. நான் பி.ஏ., பரீட்சை எழுதிய பிறகு ரிஸல்ட்டை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டுமென்று மெனக்கெட்டு, ஃபெயில் என்று தெரிந்து ஒரு வாரம் முன்னதாகவே அழ ஆரம்பித்து, பிறகு ரிஸல்ட் முறைப்படி வெளியானவுடன் இன்னொரு முறை அழுத கதையைத்தான் சொல்கிறேன்!

இப்பொழுது - மரணத்தின் வாஞ்சை மிகுந்த நெருக்கத்தின் கதகதப்பில் - எனக்குச் சில விஷயங்கள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அதை நீங்கள் ஞானம் என்று சொன்னாலும் சரி, வேறு எப்படிச் சொன்னாலும் சரி.

கல்ப காலம் வாழ்ந்தாலும், மரணம் கணநேரத்தில் நேர்ந்துவிடும் ஒரு சிறிய விபத்துத்தான். மேலும், உலகத்தில் நாம் காணும் விஷயங்கள் யாவும் திரும்பத் திரும்பப் பழைய விஷயங்களேயாகும். ஒரே விஷயத்தை ஒரு நாள் பார்த்தாலென்ன? நூறு ஆண்டுகள் பார்த்தாலென்ன? பிரபஞ்சத்தின் அமைப்பில் ஒவ்வொன்றுக்கும் ஒரு பக்குவ காலம் என்று இருக்கிறது. காலந் தாழ்ந்தோ, காலத்துக்கு முன்னோ நடப்பது எதுவுமே கிடையாது.

நீங்கள் என் மரணத்தை எப்படித் தாங்கப் போகிறீர்களோ, தெரியாது. உங்கள் வார்த்தைகளையே சொல்லுகிறேன்: "அதைப்பற்றிக் கவலைப்பட எனக்கு அதிகாரம் ஏது?" இருந்தாலும் உங்களுக்கு ரகசியமாக யுக்தி சொல்கிறேன்.

நிம்மதி வேண்டுமென்றால், நன்றாக வாய்விட்டுக் கதறி அழுங்கள்! நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு ஆயுள் முழுவதும் ஞானத்தைத் தேடி அலைந்து ஒரு புத்தகம் விடாமல் படித்துவிட்டு, கடைசியாக எதையுமே சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறும் நம்மைப் போன்ற மனிதர்களுக்கு - அழ வேண்டிய சமயத்தில் ஊரறிய அழுதும், சிரிக்க வேண்டிய சமயத்தில் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டும் இருந்தால்தான் மனம் கலகலவென்றிருக்கும். அது ஒன்றுதான் நம் கைக்கு எட்டக்கூடிய ஞானம்! நாம் மனிதர்களாகவே வாழ்வோம், மனிதர்களாகவே மடிவோம். மனிதனும் இல்லாமல், தேவனுமில்லாமல், அந்த இரண்டுங்கெட்டான் நிலை இருக்கிறதே, அது மிகமிகக் கொடிது.

உங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை யென்றால் அகல்யாவைப் பார்த்துக் கொள்ளுங்கள். நமஸ்காரம்.

தங்களன்புள்ள, சாமு"

சர்மா கடிதத்தைக் கண்களில் ஒற்றியபடியே 'ஓ'வென்று கதறிக் கதறி, குமுறிக் குமுறி, வாய்விட்டு வீடே அதிரும்படி குலுங்கிக் குலுங்கி அழுது தீர்த்தார். "நான் நாஸ்திகன். தெய்வத்தை நம்பாத நாஸ்திகன். எதிலுமே பிடிப்பில்லாத பாவி. இந்தப் பாவி வயிற்றிலா பிறந்தது இந்தத் தெய்வம்?" என்று சொல்லிச் சொல்லித் தரையிலும் விழுந்து புரண்டார்.

அலமாரி

"ஓ! மாம்பழமே!"

(கல்கி எழுதிய 'ஓ! மாம்பழமே!' நூலில் இருந்து)

லண்டன், மே 4

"நேற்று மாலை ஸவுதாம்டன் துறைமுகம் வந்துசேர்ந்த 'விக்டோரியா' என்னும் கப்பலில் இந்திய தேசத்து மாம்பழங்கள் வந்து இறங்கின."

– அயல்நாட்டுத் தந்தி

மேற்படி செய்தி இந்திய தினசரிப் பத்திரிகைகளில் சின்ன எழுத்துத் தலைப்புடன் மூலையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனுடைய பின்விளைவுகள் என்ன ஆகப் போகின்றன என்பதுமட்டும் தெரிந்திருந்தால் உபபத்திராதிபர்கள் அச்செய்தியை அவ்வளவு அலட்சியம் செய்திருக்கமாட்டார்கள். அந்தப் பின்விளைவுகள் என்னவென்பதைக் கேளுங்கள்:


மறுநாள் சாயங்காலம் லண்டனிலுள்ள இந்திய மந்திரி காரியாலயத்தில் இந்திய மந்திரிக்கும் அவருடைய சகாக்களுக்கும் இந்தியாவின் ஹைகமிஷனரால் ஒரு விருந்து நடத்தப்பெற்றது. முதன் மந்திரியும், மிஸ்டர் பால்ட்வினும் உள்படப் பிரமுகர்கள் அநேகர் விஜயம் செய்திருந்தார்கள்.

அடுத்த நாள் காலையில் வெளியான லார்ட் ராதர்மியரின் *'டெயிலி மெயில்'* பத்திரிகையில் கொட்டை எழுத்தில் கட்டம் கட்டிப் பின்வரும் கேள்வி பிரசுரிக்கப்பட்டிருந்தது: **"நேற்று இரவு இந்திய மந்திரி காரியாலயத்தில் ஒரு விருந்து நடந்தது. அந்த விருந்தைப்பற்றிய ஒரு வதந்தி பிரிட்டிஷ் பொதுமக்களின் மனத்தைக் கலக்கி வருகிறது. அந்த வதந்தியைப்பற்றிய உண்மை என்ன? மிஸ்டர் பால்ட்வின் பதில் சொல்வாரா?"**

அன்று சாயங்காலம் வெளியான லார்ட் பீவர்புரூக்கின் *'ஈவினிங் ஸ்டாண்டர்டு'* பத்திரிகையில், 'மேற்படி விருந்தில் ஒரு புதிய வகைப் பழம் பரிமாறப்பட்டதென்றும், அந்தப் பழம் இந்தியாவிலிருந்து வந்ததென்றும் நம்புவதற்குப் போதிய ஆதாரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கூடிய சீக்கிரம் இதைப்பற்றிய



தொகுப்பு:
அரவிந்த்



முழு உண்மையையும் வெளிப்படுத்தியே தீர்வோம்' என்று பிரசுரிக்கப்பட்டது.

மறுநாள் காலையில் *'டெய்லி மெயில்'* பத்திரிகையில் காணப்பட்ட விவரமாவது:

> 'உண்மை வெளியாகிவிட்டது. இந்திய மந்திரி காரியாலயத்தில் நடந்த விருந்தின்போது பரிமாறப்பட்ட புதிய பழம் இந்தியாவிலிருந்து வந்த மாம்பழம் என்று திட்டமாகத் தெரிந்து போயிற்று. ஸர் ஸாமுவேல் ஹோர் இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்? அவர் உண்மையை மறுக்க மாட்டார் என்று நம்புகிறோம். ஏனெனில் மறுக்க முடியாத சாட்சியம் நம் வசம் இருக்கிறது. பின்னர், வேறு என்ன சமாதானம் சொல்லப்போகிறார் என்று பார்ப்போம்.'

மறுநாள் *'டெய்லி எக்ஸ்பிரஸ்'* பத்திரிகையில், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களின் விசேஷக் கட்டுரை ஒன்றுடன் வெளிவந்தது. (அந்தக் கட்டுரைக்கு அவருக்கு ஆயிரம் பவுன் சன்மானம் அளிக்கப் பெற்றதென்று எழுத்தாளர் கூட்டங்களில் வதந்தி உலாவிற்று.)

"பிரிட்டிஷ் ராஜ்யத்தின் பெருமைக்கு அழியாத அவமானம் உண்டாகிவிட்டது. கேவலம், இந்தியாவிலிருந்து வந்த மாம்பழங்களை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மந்திரிகள் சாப்பிடும்படியான நிலைமைக்கு நாம் தாழ்ந்துவிட்டோம். என்ன அவமானம்! இந்தியர்களுக்கு நம்மிடமுள்ள மதிப்பில் அரைப்பங்கு இச்சம்பவத்தினால் போயிருக்குமென்பது திண்ணம். முதுகெலும்பில்லாத இந்த மந்திரிசபையை இன்னும் எத்தனை நாளைக்குப் பிரிட்டிஷ் பொதுஜனங்கள் அதிகாரத்தில் வைத்திருக்கப் போகிறார்கள்?" என்பது சர்ச்சில் கட்டுரையின் சாராம்சம்.

'மார்னிங் போஸ்ட்' பத்திரிகையில் அடுத்த நாள் வெளியான செய்தி எல்லாரையும் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. மேற்படி விருந்தில் மாம்பழம் என்று வைக்கப்பட்ட

Komala Vilas

serving you for over 21 years





Breakfast	Lunch	Dinner
8:30am till 11:30am	12:00am till 2:30pm	5:30pm till 9:30pm
Idly, Vadai, Variety of Dosas, Uppuma and many more	Every day different menu, We serve traditional lunches	Dinner is a la carte with Tiffin and variety rice.

If the food and service are good let your friends know about them
Otherwise bring it to our attention

We cater for any function such as: Seemandham, Poonal, Weddings, House Warming, Birthdays, etc.

பருப்பு தேங்காய் தேன்குழல்
Freshly made
South Indian style Laddu
South Indian style Mixture
Sweet Poli, etc.

available at
Komala Vilas.

408.733.7400



Hours:

Mon, Wed thru Friday:
8:30am to 2:30pm, 5:30pm to 9:30pm
Saturday and Sunday
8:30am to 11:30am (Breakfast)
12:00noon to 2:30pm (Lunch) 5:30pm to 9:30pm (Dinner)

Unlimited Lunch
Back on popular demand

Komala Vilas

Where taste meets tradition.

1020 E El Camino Real (El Camino Real & Henderson)
Sunnyvale CA 94087

Tel: 408.733.7400

ஒவ்வொன்றும் உண்மையில் ஒரு வெடிகுண்டு என்பதாகவும், விருந்தினரில் ஒருவர் ஒரு மாம்பழத்தை விழுங்கி அவருடைய வயிற்றில் அது வெடித்த பின்னர் உண்மை தெரிந்து மற்றவர்கள் தப்பித்துக்கொண்டார்களென்றும், விஷயம் இப்போது ஸ்காட்லண்டு யார்டு துப்பறியும் நிபுணர்கள் கையில் இருக்கிறதென்றும் அந்த விவரம் சொல்லிற்று. "இதெல்லாம் சுத்தக் கட்டுக்கதை" என்பதாக ஓர் உத்தியோகமுறை அறிக்கை மறுதலித்தது.

இதற்கிடையில், லார்ட் ராதர்மியர் தமது சொந்தக் கையெழுத்துடன் *'டெயிலி மெயில்'* பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அதன் சுருக்கம் *ராய்ட்டரால்* உலகமெல்லாம் அறிவிக்கப்பட்டது. "பிரிட்டிஷார் இந்தியா தேசத்தை ஏன் இழந்துவிடக் கூடாது என்பதற்கு ஒரு புதிய காரணம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் இந்திய மாம்பழம். நேற்று மாலைச் சாப்பாட்டின் போது அந்தப் பழத்தில் ஒன்று நான் சாப்பிட்டுப் பார்த்தேன். அதைப்போன்ற ருசியை என் வாழ்க்கையில் இதுவரையில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இவ்வளவு ருசியுள்ள பழத்தைக் கொடுக்கும் தேசத்தையா சில முட்டாள் மந்திரிகளின் முழு மூடத்தனத்தினால் நாம் இழந்துவிடுவது? பிரிட்டிஷ் பொதுமக்களே! எழுந்திருங்கள், வெள்ளைக் காகிதத்தைக் கிழித்தெறியுங்கள்"

மேற்படி கட்டுரையின் கருத்தைப் பலமாகத் தாக்கி *'டெயிலி ஹெரால்டு'* தலையங்கம் எழுதிற்று. இந்திய மாம்பழம் இங்கிலாந்துக்கு வரத் தொடங்கினால், பிரிட்டிஷ் ஆப்பிள்களுக்குக் கிராக்கி குறைந்துவிடுமென்றும், இதனால் பிரிட்டிஷ் குடியானவர்கள் நஷ்டமடைவார்களென்றும், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்கும் நாளை ஏன் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்றும் அது அபிப்பிராயம் தெரிவித்தது.

லான்ஸ்பரி தாத்தா *'ஹிந்து'* பத்திரிகையின் நிருபர் மூலமாக இந்தியாவுக்குப் பின்வரும் தந்தியை அனுப்பினார்.

"இந்த மாம்பழப் பிரச்னையைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். எங்கள் தொழிற்கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் திருப்திகரமாகத் தீர்த்து வைத்து விடுகிறோம். அதுவரையில் ஒற்றுமையைக் கைவிடாதிருங்கள்."

'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் மாம்பழத்தில் என்னென்ன வகை விடமின்கள் உண்டு என்பதைப் பற்றியும் அது உடம்புக்கு நல்லதா இல்லையா என்பதைப் பற்றியும் விவாதம் நடந்துவந்தது. டாக்டர்களும், விஞ்ஞானப் புலவர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தனர்.

'பஞ்ச்' பத்திரிகையில், மிஸ்டர் ஜான் புல் கையில் ஒரு மாம்பழத்தை வைத்துக் கொண்டு, "தின்பதா; வேண்டாமா?" என்று யோசிப்பதுபோல் ஒரு கார்ட்டூன் படம் வெளியாயிற்று, அதைப் பார்த்துவிட்டு 60,000 வாசகர்கள் சிரித்தார்கள். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றதற்கு, "என்னவோ சிரித்தோம்" என்று பதில் சொன்னார்கள்.

இந்த விவாதத்தைப்பற்றி ஆசிரியர் பெர்னார்ட் ஷா அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளச் சில பத்திரிகை நிருபர்கள் சென்றார்கள். அவர் தம் அபிப்பிராயத்தை இரண்டே

வார்த்தையில் தெரிவித்துவிட்டார். அதாவது, 'செத்துப்போங்கள்!' என்று சொன்னார்.

இங்கிலாந்தின் நிலைமை இவ்வாறிருக்க, இனி இந்தியாவில் இது சம்பந்தமாக நிகழ்ந்த சம்பவங்களைச் சற்றுக் கவனிப்போம்.

இந்தியாவிலுள்ள தினசரிப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும், இங்கிலாந்தில் நடந்த மேற்படி விவாதத்தைப் பற்றிய சகல விவரங்களும் தந்தியில் வந்து பிரசுரமாயின. ஆனால் அவைகளுக்கு இந்த விவாதத்தைப்பற்றி அபிப்பிராயம் எழுதுவதில் மிக்க தொல்லை ஏற்பட்டது. முதலில் மிதவாதப் பத்திரிகைகள் சர்ச்சிலின் கூற்றைப் பலமாகக் கண்டித்துப் பிரிட்டிஷ் மந்திரிகள் இந்திய மாம்பழம் சாப்பிட்டது அவர்களுடைய சமரச நோக்கத்தைக் காட்டுகிறது என்று பாராட்டி எழுதின. பின்னால், ராதர்மியர் பிரபுவின் கட்டுரை வெளியானபோது தேசியப் பத்திரிகைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அவை, இனிமேல் ஒரு மாம்பழம் கூட இந்தியாவை விட்டுப் போகாமல் தீவிரப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தின.

அந்த மாதம் வெளியான *கலைமகள்* பத்திரிகையில் மாம்பழக் கவிராயரைப்பற்றி ஒரு கட்டுரையும், *கலா நிலையம்* பத்திரிகையில் "முக்கனியில் மாங்கனி சேர்ந்ததா?" என்பதைப்பற்றி ஓர் ஆராய்ச்சியும் வெளியாயின.

ஸ்ரீமதி காசினி அம்மாள் மாதர் பக்கத்தில் மாங்காய் ஊறுகாய்களைப்பற்றி நாக்கில் ஜலம் ஊறும்படி எழுதியிருந்தார்.

"மாம்பழங்களுக்கே இந்தப் பாடுபடுகிறார்களே! வடுமாங்காயின் ருசியை பார்த்துவிட்டால் என்னதான் சொல்வார்களோ?" என்று விகடன் ஹாஸ்ய ரசத்துடன் எழுதினான்.

"மாம்பழங்களுக்கே இந்தப் பாடுபடுகிறார்களே! வடுமாங்காயின் ருசியை பார்த்துவிட்டால் என்னதான் சொல்வார்களோ?" என்று *விகடன்* ஹாஸ்ய ரசத்துடன் எழுதினான்.

பிரிட்டிஷ் மக்களை இந்திய மாம்பழங்கள் அதிகமாகச் சாப்பிடும்படி தூண்டி இந்தியாவினிடம் சிநேகப்பான்மையை வளர்ப்பதற்காக ஒரு தூதுக் கூட்டத்தை அனுப்ப வேண்டுமென்று மிதவாதப் பிரமுகர்கள் கூறினார்கள்.

திடீரென்று இந்தப் பிரச்னையில் வகுப்புவாத வாசனை வீசலாயிற்று. மேன்மை தங்கிய ஆகாகான் சாகிப் லண்டனிலிருந்து, "இந்த நெருக்கடியான சமயத்தில் எனது முஸ்லிம் சகோதரர்கள் ஒற்றுமையைக் கடைப்பிடிப்பார்களென்றும், அதே சமயம் ஹிந்துக்களிடம் நேசப்பான்மையுடன் இருப்பார்களென்றும் நம்புகிறேன்" என்று ஒரு செய்தி அனுப்பினார்.

“மாம்பழம் யாருக்குச் சொந்தம்? மாமரம் வைத்துப் பயிராக்கித் தண்ணீர் ஊற்றி வளர்த்தவனுக்கல்லவா? அவன் சும்மா இருக்க, இவர்கள் அடித்துக் கொள்கிறார்களே! அடா! இதென்ன அநியாய உலகம்?”

மௌலானா ஷவுகத் அலி சாகிப் அவர்கள் கிலாபத் கமிட்டியைப் புனருத்தாரணம் செய்து, முஸ்லிம் தொண்டர் படை திரட்டுவதின் அவசியத்தை வற்புறுத்தினார்.

“இந்தியாவில் பழுக்கும் மாம்பழங்களில் 100க்கு 40 வீதம் எங்களுக்குக் கொடுத்தாலன்றி. இந்த ஹிந்துக்கள் சுயராஜ்யம் அடைவதைப் பார்த்துவிடுகிறேன்” என்று கர்ஜித்தார் டாக்டர் ஷாபத் ஆமத்கான்; இதைக் கேட்ட டாக்டர் மூஞ்சி அவர்கள் தாடியை ஒரு கையால் உருவிக்கொண்டு மற்றொரு கையால் கைப் பிரம்பைச் சுழற்றினார் என்று முஸ்லிம் பத்திரிகைகள் வெளியிட்டன.

ஆதித் திராவிட சமூகத்திலும் கிளர்ச்சி உண்டாயிற்று. டாக்டர் அம்பேத்கரும், எம்.சி. ராஜாவும் ஒருவர் வாய் திறப்பதை இன்னொருவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். முதலில் பேசுகிறவர் எது சொன்னாலும், அதற்கு எதிராக மற்றொருவர் பேசுவதென்று அவர்கள் தீர்மானித்திருந்தனர். அவர்களுடைய சிஷ்ய கோடிகள் அதிருப்தியுற்று, “கொண்டுவா மாம்பழம்!” என்று கூச்சலிட்டார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் முன்வந்து, எல்லா விஷயங்களிலும் போல இதிலும் ஸ்திரீகள் அலட்சியம் செய்யப்படுவதைக் கண்டித்தார். விசேஷ மாதர் மகாநாடு ஒன்று கூட்டி அதில், “ஸ்திரீகள் என்றால் என்ன? அவர்களுக்கு வாய் கிடையாதா? ருசி கிடையாதா? மாம்பழம் சாப்பிட முடியாதா?” என்று உருக்கமாகப் பேசி, தாமே ஒரு பழத்தைப் பிரத்தியட்சமாய்ச் சாப்பிட்டுக் காட்டினார்.

பண்டித மதன்மோகன் மாளவியா பத்திரிகைகளுக்கு ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். பிரம்மா ஜகத்தைச் சிருஷ்டி செய்ததிலிருந்து தொடங்கி மாம்பழம் இந்தியாவுக்கே உரியது என்று ஸ்தாபித்தார். கிழக்கிந்தியக் கம்பெனியார் வந்ததிலிருந்து, சீமைக்குச் சென்றிருக்கும் இந்தியாவின் செல்வங்களுக்கெல்லாம் ஜாப்தா கொடுத்து, மாம்பழத்தையும் அவ்வாறு போகவிடக்கூடாதென்றும், அதற்காகத் தமது உயிரை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் கூறினார்.

விஞ்ஞான மேதாவியாகிய ஸர் சி.வி. ராமன் ஒரு சர்வகலாசாலைப் பிரசங்கத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டு, “ஆகையால் மாணாக்கர்களே! புத்தகங்களை வீசி எறிந்துவிட்டு மாம்பழம் சாப்பிடுங்கள்” என்று கூறினார்.

டாக்டர் நாகராஜ சர்மா, ஸர் சி.வி. ராமன் சொல்வது சுத்த அபத்தமென்று நிரூபித்து *‘ஹிந்து’* பத்திரிகையில் மூன்று பத்தி எழுதினார்.

வங்காளத்தில் ஒரு விஞ்ஞானப் புலவர் கிளம்பி, ஸர் சி.வி. ராமன் சொன்னதைத் தாம் மூன்று வருஷத்துக்கு முன் சொன்னதாகவும், தம்மை அவர் காப்பியடித்துவிட்டதாகவும் முறையிட்டார். *'மாடர்ன் ரிவியூ'* அவர் கட்சியை ஏற்று, ஸர் சி.வி. ராமனுடைய யோக்கியதையை வெளிப்படுத்த ஆரம்பித்தது!

கவி ரவீந்திரநாத தாகூர் அவர்களிடம் இந்த விவாதத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அவர், "ஓ மாங்கனியே! நீ நாவிற்கு எவ்வளவு இனிப்பாயிருக்கிறாய்? ஆயினும் உன்னுடைய பெயரால் உலகில் எவ்வளவு அநீதிகள் இழைக்கப்படுகின்றன!" என்று தெரிவித்தார்.

டேராடூன் சிறைச்சாலைக்குள்ளிருந்து ஒரு மெல்லிய குரல் கேட்டதாக ஒரு வதந்தி பரவியது. அந்தக் குரல், "மாம்பழம் யாருக்குச் சொந்தம்? மாமரம் வைத்துப் பயிராக்கித் தண்ணீர் ஊற்றி வளர்த்தவனுக்கல்லவா? அவன் சும்மா இருக்க, இவர்கள் அடித்துக்கொள்கிறார்களே! அடா! இதென்ன அநியாய உலகம்?" என்று சொல்லிற்றாம்.

சேலம் ஒட்டு மாம்பழ வியாபாரிகள் பத்திரிகைகளின் முதல் பக்கங்களில் பெரிய பெரிய விளம்பரங்கள் செய்தார்கள்.

அவர்களில் கெட்டிக்காரரான ஒருவர் அச்சமயம் டெல்லியில் தங்கியிருந்த மகாத்மா காந்தியின் பெயருக்கு ஒரு கூடை ஒட்டு மாம்பழம் ரயில் பார்ஸலில் அனுப்பினார். மாம்பழக் கூடையைக் 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்' அதிவேகமாய்க் கொண்டு சேர்த்தது.

இரண்டு நாளைக்கெல்லாம் "மகாத்மா ஏழுநாள் உபவாச விரதம் தொடங்கியிருக்கிறார்" என்னும் பயங்கரமான செய்தி தேசமெங்கும் பரவியது. விசாரித்ததில், மகாத்மா சேலம் ஒட்டு மாம்பழம் ஒன்றின் ரஸத்தைச் சாப்பிட்டுவிட்டு அதன் ருசியைப் பற்றி வெகுநேரம் பேசிக் கொண்டிருந்ததாகவும், இவ்வாறு நாவின் ருசிக்கு இடங்கொடுத்துவிட்டது தவறு என்று பின்னால் உணர்ந்து பிராயச்சித்த உபவாசம் தொடங்கியிருப்பதாகவும் தெரியவந்தன

"உலகப் பெரியாரையே மயக்கி உபவாசம் இருக்கச் செய்த ஒப்பற்ற ஒட்டு மாம்பழம்" என்று எங்கெங்கும் விளம்பரங்கள் காணப்பட்டன.

நிற்க, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் வேண்டுகோளின்படி தேசத்தின் நானாபாகங்களிலிருந்தும் மகாத்மாவுக்குத் தந்திகள் பறந்தன.

"மாம்பழம் சாப்பிட நாங்கள் இருக்கிறோம். தாங்கள் கவலைப்படவேண்டாம். உபவாசத்தை நிறுத்தவும்" என்று இந்திய மக்கள் ஒரு முகமாய் மகாத்மாவை வேண்டிக்கொண்டார்கள்.

இப்படி வேண்டிக்கொண்டவர்களில் நானும் ஒருவனாதலால், இதோ ஒரு மாம்பழத்தைச் சாப்பிட்டுத் தொலைக்கிறேன்.

நன்றி: 'ஓ! மாம்பழமே!', ஆசிரியர்: கல்கி, தமிழ் மின் நூலகம் https://tinyurl.com/kalkimango

சிறப்புப் பார்வை



முனைவர் மலையமான்

தென்றல்

Balagan Business & Tax Service

Serving all States from our Nation's Capital

BBT



AICPA PEER REVIEWED Audit Firm

- Accounting and Bookkeeping Service
- Audit, Review, Compilation and Attestation Service
- Tax Service
- IRS Solutions
- Web Hosting
- ERP / CRM Integration
- Business Consultancy
- Dedicated Service with Smiling Faces
- Experienced and Reliable Staff Year Around
- Rely on 24 Years of Experience

Balagan Arumugaswamy, CPA., LL.M

தமிழ் மக்களுக்கு எங்களது நல்வாழ்த்துக்கள்

Tel: 703.723.4488, 703.723.4458, 301.931.1040, 301.931.1042
Fax: 703.723.1140, 301.595.4332

Email: balagancpa@msn.com
Web: www.balaganfinancials.com

Balagan Business & Tax Service
Main Office: 12100 Franklin Street, Beltsville, MD 20705
Branch Office:
- 44335 Premier Plaza, Suite #100, Ashburn, VA 20147
- 14701 Lee Highway, Suite #203, Centreville, VA 20121

JESSIE TAX SERVICES



SERVICES AVAILABLE

- Individual Income Tax Preparation with Worldwide Income, Multi-State
- Corporate, Partnerships, LLC'S Income Tax Preparation.
- NRI Taxes
- Full Accounting Services: Bookkeeping, Payroll, Sales Tax
- IRS, FTB, Sales Tax, EDD Audits representation
- New Business Start-Up
- Tax Advise / Consultation.

OUR GOALS

- Minimum Tax
- Reasonable Charges
- Open All Year Around
- Client Satisfaction
- Extended Hours During Tax Season
- Solve Tax Problams

JASWANT S. JESSIE,
Enrolled Agent (EA), NTPI Fellow



1491 S. Wolfe Road, Sunnyvale, CA 94087
408.736.2451

Fax: 408.736.8626
Email: jessie@jessietax.com
Web: www.jessietax.com

நா. இராசகோபாலன் என்னும் இயற்பெயரை உடையவர் முனைவர் மலையமான். சிறார் இலக்கியத்திற்கு மிக நீண்ட காலமாக குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை வழங்கி வரும் இவர், தமிழ் இலக்கியம் சார்ந்தும், திருக்குறள் குறித்தும் பல ஆய்வு நூல்களை எழுதியிருக்கிறார். இதழாளர். கவிதை நூல்களின் ஆசிரியரும்கூட. இந்தியாவில் குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் இந்த மாதத்தில் தனது படைப்புகளில் சரிபாதியைச் சிறார்களுக்காக எழுதியிருக்கும் மலையமான் அவர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்வோமா?

பிறப்பு, கல்வி

மலையமான், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆரணியில், ஜூலை 15, 1932 அன்று, இரா. நாராயணன் - பாலகுசாம்பாள் இணையருக்குப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர்: நா. இராசகோபாலன். தந்தை பள்ளி ஆசிரியர். மலையமான், போளூரில் தொடக்கக் கல்வி கற்றார். திருப்பதியிலுள்ள திருவேங்கடன் கீழ்த்திசைக் கல்லூரியிலும், பின்னர் கரந்தை தமிழ்க் கல்லூரியிலும் பயின்று புலவர் பட்டம் பெற்றார். தமிழில் இளங்கலை, பி.லிட்., மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். 'தமிழ் ஆட்சிமொழி சிக்கல்களும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயின்று நூலக அறிவியலில் இளநிலைப் பட்டம் பெற்றார். பிரெஞ்சு மொழியில் பட்டயம் பெற்றார்.

பணிகள்

மலையமான் தொடக்க காலத்தில் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் அப்பணியில் இருந்து விலகி, சென்னை குருசாமி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் மதிப்பியல் பேராசிரியராகப் பணியாற்றினார். நூலக அறிவியலில் பட்டம் பெற்றபின் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் தொழில்நுட்ப உதவியாளராகப் பணிபுரிந்தார். தொடர்ந்து கன்னிமாரா நூலகத்திலும், நெடுஞ்சாலைத் துறை நூலகத்திலும் நூலகராகப் பணிபுரிந்தார். இறுதியில் தலைமைச் செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

திருமண வாழ்க்கை

மலையமான் சென்னைப் பல்கலையில் நூலகராகப் பணியாற்றியபோது, ராணி மேரி கல்லூரியில் பணியாற்றிய சரளாவுடன் நவம்பர் 19, 1969 அன்று திருமணம் நடந்தது. திருமணத்தை சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தலைவர் ந. சஞ்சீவியும், சிறுவை மோகனசுந்தரனாரும் தலைமையேற்று நடத்தினர். நிகழ்வில் மயிலை. சீனி வேங்கடசாமி போன்ற பலர் கலந்துகொண்டு வாழ்த்தினர். சரளா, திருமணத்திற்குப் பின் சரளா இராசகோபாலன் என அழைக்கப்பட்டார். இவர் தமிழ்ப் பேராசிரியர். பல்துறை எழுத்தாளர். பல ஆய்வு மாணவர்கள் முனைவர் பட்டம் பெற வழிகாட்டியவர். இந்த இணையருக்கு தமிழொளி என்ற



மகளும் அன்பொளி என்ற மகனும் உள்ளனர்.

எழுத்துப் பணி

நா. இராசகோபாலன், பள்ளியில் படிக்கும்போது அழ. வள்ளியப்பாவின் நூல்களை வாசித்து இலக்கிய ஆர்வம் தூண்டப் பெற்றார். தனது இயற்பெயரிலும், மலையமான் என்னும் புனைபெயரிலும் பல்வேறு படைப்புகளை எழுதினார். முதல் படைப்பு, 1952-ல் கரந்தை தமிழ்ச் சங்கம் நடத்திய *'தமிழ்ப்பொழில்'* இதழில் வெளியானது. தொடர்ந்து பல இலக்கிய இதழ்களில் கட்டுரைகளை எழுதினார். *'ஹோம்லாண்ட்'*, *'கேரவான்'*, *'பொயட் இண்டர்நேஷனல்'* போன்ற ஆங்கில இதழ்களிலும் சில கவிதைகளை எழுதினார். இவரது சிறார் இலக்கியப் படைப்புகள் *தமிழம்*, *அறிவுக்கூர்வாள்*, *நன்னன் நாடு*, *இளம் விஞ்ஞானி*, *அழகர் சோலை*, *கோகுலம்*, *முல்லைச்சரம்*, *அறிவுச்சுடர்*, *அறிவியல் பூங்கா*, *அறிக அறிவியல்* போன்ற இதழ்களில் வெளியாகின.

சிறார் இலக்கியத்திற்கு மலையமான் செய்திருக்கும் பங்களிப்பு குறிப்பிடத் தகுந்தது. சிறார் சிறுகதைகள், நாவல், கட்டுரை, நாடகம், வாழ்க்கை வரலாறு என சிறார்களுக்காகவே 40-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவரது *'தமிழ் ஆட்சிமொழி சிக்கல்களும் தீர்வுகளும்'* என்னும் முனைவர் பட்ட ஆய்வேடு நூலாக வெளிவந்து கவனத்தை ஈர்த்தது. தமிழ் இலக்கியம், மொழி, ஆய்வு, *திருக்குறள்*, கவிதை, கவிதை நாடகம் என பல்வேறு வகைமைகளில் மலையமான் சுமார் 80-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவரது படைப்புகளை ஆராய்ந்து பல மாணவர்கள் எம்.பில்., மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளனர். இவரது படைப்புகள் சில சென்னைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் போன்றவற்றின்

விருதுகள்

'அறிவியல் சிறுகதைகள்' நூலுக்கு, 1985ம் ஆண்டின் சிறந்த நூலுக்கான தமிழக அரசின் முதல் பரிசு

1990ல், 'குழந்தை எழுத்தாளர் சங்கம்' நடத்திய போட்டியில் *'அறிவியல் வெளிச்சங்கள்'* நூலுக்கு இரண்டாம் பரிசு

'கடலுக்குள்ளே ஒரு சிறைச்சாலை' நூலுக்கு, 1993ம் ஆண்டின் சிறந்த நூலுக்கான தமிழக அரசின் முதல் பரிசு

'நோயே டாக்டரானால்' நூலுக்கு எழுத்தாளர் சங்கப் பரிசு

'நோயே டாக்டரானால்' நூலுக்கு பாரத ஸ்டேட் வங்கிப் பரிசு

'நீர் மாங்கனி' நூலுக்கு தமிழக அரசின் முதல் பரிசு

'நீர் மாங்கனி' நூலுக்கு அனந்தாச்சாரி அறக்கட்டளைப் பரிசு

'இருதலைப் பறவை' நூலுக்கு பாரத ஸ்டேட் வங்கிப் பரிசு

'மின்மினிக் கதைகள்' நூலுக்கு பாரத ஸ்டேட் வங்கிப் பரிசு (2000)

'மின்மினிக் கதைகள்' நூலுக்கு, புதுச்சேரி சிறுவர் இலக்கியச் சிறகம் அமைப்பு வழங்கிய பரிசு (2000)

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது (2012)

இந்திய அரசின் தேசிய அறிவியல் விருது (2013)

அழ. வள்ளியப்பா இலக்கிய வட்டம் வழங்கிய அழ. வள்ளியப்பா இலக்கிய விருது

வி.ஜி.பி. சந்தனம்மாள் விருது

என்.கே. வேலன் அறக்கட்டளை வழங்கிய குழந்தை இலக்கியத்திற்கான சிறந்த சாதனையாளர் விருது

தேனீ இலக்கியக் கழகம் வழங்கிய எழுத்துச் செம்மல் பட்டம்

உரத்த சிந்தனை அமைப்பு வழங்கிய அறிவியல் மாமணி பட்டம்

தமிழின் சீர் பரவுவார் பட்டம்

திருக்குறள் பரப்புச் செம்மல் பட்டம்

மொழிப்போர் மறவர் (தலைநகர் தமிழ்ச் சங்கம்)

செம்மொழிச் செம்மல்

மலையமான் *'தினமணி'* இதழில் சிந்திக்க வைக்கும் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். *'முகம்'* இதழில் தொடர்ந்து பல இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதி வருகிறார்.

பாடத்திட்டங்களில் இடம்பெற்றன. சில தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூலாக இடம்பெற்றன.

பிற பணிகள், பொறுப்புகள்

மலையமான், *'இளம் விஞ்ஞானி'*, *'இயற்கை'*, *'ஐந்திணை'*, *'திருவள்ளுவர் அணி'*, *'மக்கள் செங்கோல்'*, *'அறிவியல் ஒளி'* போன்ற சிறார் இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் மூன்று ஆண்டுகள் பொருளாளராகவும், இரண்டு ஆண்டுகள் ஆலோசகராகவும் பணிபுரிந்தார். கோயம்புத்தூரில் நடைபெற்ற குழந்தை இலக்கிய மாநில மாநாட்டிலும், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற குழந்தைகளுக்கான அறிவியல் படைப்பு தேசியக் கருத்தரங்கிலும் பங்கு பெற்று உரையாற்றினார்.

உலகக் கவிஞர் பூங்கா, தலைநகர் தமிழ்ச் சங்கம், தமிழ் எழுத்தாளர் சங்கம், இந்திய நூலாசிரியர் பெருமன்றம், இந்தியப் பண்பாட்டு அறிவியல் மன்றம், தமிழ்நாடு பண்பாட்டு அறிவியல் நூற்றொகைத் தொகுப்பு திட்டக் குழு, உலகத் திருக்குறள் பேரவை, தமிழ்க் கவிஞர் மன்றம், பதிப்பாளர் மையம் ஆகிய அமைப்புகளில் முக்கியப் பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றினார்.

மலையமான் படைப்புகள்

சிறார் நூல்கள்: பனித்துளிக் கதைகள், தேன்துளிக் கதைகள், மழலைக் கதைகள், துளிர்க் கதைகள், அரும்புக் கதைகள், மின்மினிக் கதைகள், ஒளிக் கதைகள், முத்துக் கதைகள், குட்டிக் கதைகள், சின்னஞ்சிறு கதைகள், உருவகக் கதைகள், மின்னல் கதைகள், பண்புநெறிக் கதைகள், உருக வைக்கும் உருவகக் கதைகள், இன்பநெறிக் கதைகள், திருக்குறள் கதைகள், அறிவொளிக் கதைகள், நன்னெறிக் கதைகள், இந்திய நாட்டின் விந்தைக் கதைகள், அறிவியல் சிறுகதைகள், விண்வெளிக் கதைகள், கி.பி. 2087ல் நன்னெறிக்கதைகள், அறிவியல் கதை மஞ்சரி, அறிவியல் புனை கதைகள், பிற நாட்டுச் சிறுகதைகள், அயலகத்து அருங்கதைகள், மூன்று அரும்புகள், கடலுக்குள்ளே ஒரு சிறைச்சாலை, அன்னை இந்திரா, அறிவியல் பெருமணிகள், இந்திய விஞ்ஞானிகள், உலக அறிவியல் விஞ்ஞானிகள், அறிவியல் நறுமலர்கள், அறிவியல் வெளிச்சங்கள், பறவைகள் பலவிதம் (2 தொகுதிகள்), விலங்குகள் பலவிதம், அறிவியல் புதுமைகள் (2 தொகுதிகள்), இயற்கை அன்னையின் அன்புக் குழந்தைகள்

கவிதை, கட்டுரை, இலக்கிய ஆய்வு நூல்கள்: தமிழ் ஆட்சி மொழி, மொழியும் இனமும், மொழி இனச் சிந்தனைகள், தமிழும் தமிழரும், தமிழா! தமிழா!, சிந்தனைக் களஞ்சியம் (மரபுத் தொடர் அகராதி), செவ்வியல் மொழி – தமிழ், செவ்வியலும் செந்தமிழும், தமிழ் வாழ வேண்டும், செந்தமிழ்ச் சிந்தனைகள், திருக்குறள் துளிகள், குறளில் ஒளிஉவமைகள், குறளின் ஒளியில், குறளின் அலைகள், மலையமான் கவிதைகள், இதயவரிகள், நோபில் பரிசு பெற்ற கவிஞர்கள், காட்டு மலர்கள், நோயே டாக்டரானால், நீர் மாங்கனி (கவிதை நாடகம்), இருதலைப் பறவை, உயிர்க் கொடை, கடல் வயிறு.

ஆய்வு முடிவுகள்

மலையமான் ஆய்வு செய்து கூறியிருக்கும் கீழ்க்காணும் பல கருத்துக்கள் சிந்திக்க வைப்பன:

- தொடக்க நிலையில் தமிழில் 51 எழுத்துக்கள் இருந்தன. பின்பு அது 31 எழுத்துகளைக் கொண்டதாகத் திட்டமிட்டு நிறுவப்பட்டது. குறில், நெடில், மெய் எழுத்தின் மூன்று இனங்கள் ஆகியவையும் திட்டமிட்டு அமைக்கப்பட்டன.
- மூன்று இன முக்கிய மெய் எழுத்துக்களுடன் (த், ம், ழ்) மூன்று முக்கிய உயிர் எழுத்துகளை (அ, இ, உ) இணைத்துத் "தமிழ்' என்று மொழிக்குப் பெயர் சூட்டப்பட்டது. பின்பு இறுதி உகரம் மறைந்தது. தமிழ் என்று சொல் நிலைத்தது.
- உலக மொழிகளில் தமிழில்தான் ஓரெழுத்துச் சொற்கள் அதிகமாக உள்ளன (64 சொற்கள்).
- சொல் சுருக்கத்திற்காகத் தமிழின் சில சொற்களில் இரண்டு குறில் எழுத்துக்கள் அடுத்தடுத்து வரும்போது, முதல் குறில் நெடிலாகும். இரண்டாம் குறில் மறையும். (எடு: அகலமரம் – ஆலமரம், மலையமகன் – மலையமான்).

  மேலே சொன்ன விதிமுறைப்படி சில வினைச் சொற்களின் விகுதிகள் தோன்றின (அவன் – ஆன், அவள் – ஆள், அவர் – ஆர்).
- தமிழ் என்ற சொல்லுக்குப் பத்துப்பொருள்கள் உள்ளன. அவை, இனிமை, நீர்மை, அகப்பொருள், வீரம், இறைமை, சைவசமயம், படைவீரர், நாடு, வேந்தர், தமிழர் என்பன.
- *வீரசோழியம்* எழுதிய புத்தமித்திரர் 'ழ' என்ற தமிழின் சிறப்பெழுத்தை அழிக்க முயன்றார்.
- வள்ளலார் என்பதைப் போல், திருவள்ளுவர் என்பது காரணத்தால் அமைந்த சிறப்புப் பெயர்.
- திருவள்ளுவர் நூற்றுக்கும் மேற்பட்ட புதுச்சொற்களைப் படைத்துள்ளார்.
- *திருக்குறளின்* முதல் அதிகாரம் இறைமைச் சிறப்பு (அ) இறைமை வழிபாடு என்று திருவள்ளுவரால் பெயர் தரப்பட்டிருக்கலாம்.
- திருவள்ளுவர் தன் நூலுக்கு *முப்பால்* என்று பெயர் சூட்டியிருப்பார். *திருக்குறள்* என்பது பிற்காலத்தில் தரப்பட்ட சிறப்புப் பெயர்.
- திருவள்ளுவர் இந்தியா முழுவதும் பயணம் செய்திருக்கிறார்.
- திருவள்ளுவர் பொது உடைமைக் கருத்துடையவர்.
- திருவள்ளுவர் கணிதத்துறை வல்லுநர்.
- தொல்காப்பியரின் காலம் கி.மு. 1000க்கும் முற்பட்டது.
- தமிழ் சுருக்க நிலை கொண்ட மொழி.



BALU SHASTRI

is now available in the Bay Area to conduct all Hindu religious rituals both in North and South Indian manner.

- Pooja of all Kinds
- Ceremonies
- Homams, etc.

Please contact:



Balu Shastri
6211 Prospect Road
San Jose, CA 95129
Tel: 408.738.0571
Cell: 408.393.7722
balushastri87@gmail.com

Vedic Sampradaya Rituals

All Traditional Hindu Pujas & Homas like -

- Ganapati, Navagraha Homas
- Upanayana, Seemantham, Marriages
- Sradha, Funeral Services

Classes in Puja Vidhi & Veda Chanting

Please Call

Pandit Ravichandran
Veda Pandit l Sahitya Siromani



1193 Bluebell Drive
Livermore, CA 94551
925.321.0285
panditravi@comcast.net

Om Sri Mathre Namaha



All kinds of Hindu traditional pujas and homas.

Ganapathi, Navagraha, Vasthu, Ayushya Homas.
Marriages, Seemantham, Namakarnam, Upanayanam, Sathyanarayana puja, Lakshmi Puja, Durga Sapthasathi Yanthra Puja.

Hiranya Sradha and last rites.

American Born Children's Horoscope.

Pandit Ganesh Shasthry

880 E Fremont Ave, Apt. 302
Sunnyvale, CA 94087
Home: **408.245.5443**
Cell: **925.209.7637**
Kabalikarpaga@hotmail.com
Lokasamastha sukino bhavanthu



!!! Aum Vasu Rudra Aadhithyaya Namaha !!!

All Poojas including:
Ganapathy-Homa, Lakshmi-Kubera, Rudra Abishek, Durga, Amba, Navagraha, Sathyanarayana Vratha, Ayyappa-Mandala, Car Pooja at dealer & home, Vidhyarambam, Santhi-Homa, Punyahavachana, Namakarana, Jathakarana, Thread, Marriage, Shashtibdha, Bhimarathasanthi, Sadhaabhishekam, Funeral-Rights, Sraadha ...

Pleasant & Excellent in English, Hindi, Telugu, Tamil, Malayalam ...

Serving Silicon Valley Bay Area & Nationwide





Bala Krishna Sharma
Cell: 510.417.7358
balakrishna1359@gmail.com

Sri. M. Vaithianathan Sastriji
Hindu Vedic Priest



All Hindu Religious Services
Pooja / Hawan and Samskarams



Ganapathy, Navagraha, Durga, Lakshmi, Saraswathi, Sudarsana, Narasimha, Vasthu, Ayushya, Mruthunjaya, Rudra and other Homas - Sathyanarayana, Sai Sathya Vrathams, Bhagawati Seva, Chandi Pat, All Shanthi Poojas, Naming Ceremony, Punyahavacham, Hair Offering, Upanayanam, Seemantham, Wedding, Gruha pravesam, 25th & 50th Wedding Anniversary, 60, 70, 80 - Birthday Shanthi, Last Rites, 12th day & 31st day Annual Sradh and all Hindu Religious, etc - Teaching Vedas and Slokas. Languages - English, Tamil, Telugu, Malayalam, Kannada & Hindi. Catering (Upon Request)

God Bless You

215.501.7175 | 267.884.6664
mvsastrigal@yahoo.com
mvsastrigal@gmail.com

Self transportation to Pooja site within 4 States - NY, NJ, & PA, DE

www.sastriji.com

Priest
V.Bhairava Moorthy



For All Kinds of Hindu Ceremonys
Rudrabhishekam, Grahasanti, Grihapravesam, Satyanarayana Pooja, Wedding (Officiant), Navachandi, Sraddhas
Veda / Sloka Classes & All Other Services

Email: vediccenter05@yahoo.com
Self Transport to Pooja Site. Any where in USA

V Bhairava Moorthy
732.438.1679 (Res)
718.730.3568 (Cell)
www.vediccenter05.com



மூனைவர் மலையமான், சரளா இராசகோபாலன்

- ஒலிச்சீர்மை, சொற்சுருக்கம், பொருள் மாறுபாடு, உலக வழக்கை ஏற்றல் ஆகிய 4 காரணங்கள் மொழிப் புணர்ச்சியின் வழிமுறைகளாகும்.
- தொல் பழங்காலத்தில் மணமக்களை வாழ்த்துவதற்குச் செந்நெல்லே பயன்படுத்தப்பட்டது. பின்பு நெல்லுக்குப் பதிலாக மஞ்சள் அரிசி தூவும் பழக்கம் வந்தது.
- தமிழ் மன்னர்கள் உழவர்களில் சிறந்தவருக்குக் காவிதி என்ற பட்டம் தந்தனர் (கா – சமுதாயத்தைக் காப்பாற்று); வீரரில் சிறந்தவருக்கு ஏனாதி என்ற பட்டம் தந்தனர். (ஏ – பகைவரைக் கொல்லும் அம்பு); வணிகரில் சிறந்தவருக்கு எட்டி என்ற பட்டம் தந்தனர். (எட்டி – எட்டம் – தொலை தூரம் சென்று வணிகம் புரிந்தவர்); எட்டி பின்பு செட்டியாகத் திரிந்தது. இது கன்னட மொழியில் ஷெட்டி என்றானது.
- தமிழ்ச்சொல்லான சிந்து என்பதிலிருந்து இந்தியா என்ற பெயர் வந்தது. (சிந்து – ஆறு).
- சிந்திமொழி, தமிழின் மகளான மற்றொரு திராவிட மொழி.

(நன்றி: *தென்செய்தி* இதழ்)



கதிரவனைக் கேளுங்கள்!

ஆரம்பநிலை நிறுவன யுக்திகள்

பாகம்-2|-e

முன்னுரை:

ஆரம்பநிலை நிறுவனங்கள் தழைத்து வளர வேண்டுமானால், அவைகள் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள், தந்திரங்கள், யுக்திகள் யாவை எனப் பலர் பலப்பல தருணங்களில் என்னை கேட்டதுண்டு. அவர்களுடன் நான் பகிர்ந்து கொண்ட சில குறிப்புக்களே இக்கட்டுரைத் தொடரின் அடிப்படை.

வடிவமைப்புக் கோவைக்காக இக்கட்டுரை வரிசை CNET தளத்தில் வந்த Startup Secrets என்னும் கட்டுரைத் தொடரின் வரிசையைச் சார்ந்து அமைத்துள்ளேன். ஆனால் இக்கட்டுரைத் தொடர் வெறும் தமிழாக்கமல்ல. இந்தக் கட்டுரை வரிசையில் என் அனுபவ பூர்வமான கருத்துக்களோடு, CNET கட்டுரையில் உள்ள கருத்துக்களையும் சேர்த்தளித்துள்ளேன். அவ்வப்போது வேறு கருத்து மூலங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதாக உத்தேசம்.

இப்போது ஆரம்பநிலை யுக்திகளை மேற்கொண்டு கற்கலாம் வாருங்கள்!

- ***கேள்வி:** நான் ஒரு பெரிய நிறுவனத்தில் விற்பொருள் மேலாண்மை அதிகாரி. என் சொந்த நிறுவனத்தை ஆரம்பிக்க ஒரு யோசனை உள்ளது. அதற்காகப் பெரிய ஆராய்ச்சிகள் செய்து நீங்கள் பரிந்துரைத்ததைப் போலவே பலரையும் கலந்து ஆலோசித்தாயிற்று. என் யோசனைக்குச் சாதகமாகக் கருத்துக்கள் கிடைத்துள்ளன. ஆனால் ஓரளவு சந்தேகமும் உள்ளது! வேலையை விடுத்து நிறுவனத்தை ஆரம்பிக்கத் தயக்கமாக உள்ளது. அதற்கு உங்கள் பரிந்துரை என்ன?*



கதிரவன்
எழில்மன்னன்

கதிரவனின் பதில்: *இந்த யுக்திக் கட்டுரையின் பகுதியில் "தயங்காதீர்கள் தாவி விடுங்கள்" என்று பதிலளித்திருந்தேன்! ஆனால் கண்மூடித்தனமாகத் தாவச் சொல்லவில்லை. புத்திசாலித்தனமாகச் சில முன் நிபந்தனைகளை அனுசரித்து, பின்னரே தாவ வேண்டும் என்றும் சுருக்கமாகக் கூறியிருந்தேன். இப்போது அந்த முன் நிபந்தனைகள் என்ன, ஆரம்பநிலை நிறுவனத்துக்குத் தாவ எம்மாதிரியான செயல்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பவற்றை விவரித்து வருகிறோம்.*



முந்தைய பகுதிகளில் முதல் நிபந்தனையாக, நீங்கள் பெரும் நிறுவன வேலையிலிருந்து விலகி ஆரம்பநிலை நிறுவனத்திலுள்ள சிக்கல்களைச் சந்தித்து, பல வருடங்கள் பாடுபடத் தயாரா என்பதை விவரிக்க ஆரம்பித்தோம். இந்த முதல் நிபந்தனையில் பல துணை அம்சங்கள் உள்ளன என்றும் முதலிரண்டு துணை அம்சங்களாகக் குடும்ப நிதிநிலைமை பற்றியும், எந்தப் பிரச்சனை, பணியானாலும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிவரும் என்பதையும், ஏன் நிறுவனம் ஆரம்பித்தோம் என்பதில் தெளிவும் உறுதியும் வேண்டும் என்றும் விளக்கினோம்.

இப்போது முதல் நிபந்தனையின் துணை அம்சத்தைப் பற்றிக் காண்போம்.

ஆரம்பநிலை நிறுவனம் என்றால் பல தரப்பட்ட நெருக்கடிகள் பல திசைகளில் இருந்து எழக்கூடும் என்று சென்ற பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அவற்றை நிவர்த்திப்பதைப் பற்றி மட்டுமே கண்டிருந்தோமே ஒழிய, நிவர்த்திக்க முடியாமல் போனால் என்ன செய்வது என்பதை விவரிக்கவில்லை!

ஆம்! எதிர்வரும் நெருக்கடிகள் அத்தனையையுமே சமாளித்து வெற்றிகண்டு மேற்கொண்டு சர்வ சாதாரணமாகப் பயணித்துக் கொண்டே

இருக்க முடியும் என்பதில்லை! சில சமயம் எதாவது ஒரு நெருக்கடியை, உங்கள் அதி சாமர்த்தியத்தினாலும், தீவிர பிரம்மப் பிரயத்தனத்தினாலும் கூட நிவர்த்திக்க முடியாமல் போகக் கூடும்!

அப்போதும் மனம் தளராமல் அத்தகைய தோல்வியை ஏற்றுக்கொண்டு, உங்கள் திட்டத்தையோ, யோசனையையோ சற்று மாற்றிக்கொண்டு, பயணிக்கும் திசையைச் சற்றேயோ அல்லது பெருமளவோ திருப்பிக் கொண்டு மேற்கொண்டு முயலும் மனோதிடம் வேண்டும்.

ஆரம்பநிலை நிறுவனப் பயணத்தில் இத்தகைய சிறு தோல்விகள் சகஜம். அவற்றை ஏற்றுக் கொண்டு பயணிப்பதற்கான சிறு மாற்றங்கள் அல்லது பெரும் மாற்றங்களைப் (small adjustments or big pivots) பற்றி ஏற்கனவே வேறு ஒரு யுக்தியில் விவரித்து விட்டதால் இத்தோடு அதை நிறுத்திக் கொள்கிறேன்.

ஆனால், சில ஆரம்பநிலை நிறுவனங்கள் சிறு தோல்விகளை மட்டும் அல்லாமல், சில நிர்ப்பந்தங்களால் பெரும், நிவர்த்திக்க முடியாத இடைஞ்சல்களைச் சந்திக்கின்றன. அத்தகைய இடைஞ்சல்கள் பலதரப்பட்டவையாக இருக்கலாம். பொதுவாக ஐந்து வகைகளாக அவற்றைப் பிரிக்கலாம்.

முதல்வகை, தொழில்நுட்ப இடைஞ்சல். அதாவது, நிறுவனம் வெற்றி பெற வேண்டுமானால், விற்பொருள் அப்போது கிடைப்பவற்றை விடப் பெருமளவு அதிகப் பலன் அளிப்பதாக இருக்க வேண்டும். அதற்கு மிக முன்னேறிய



தோல்வியை ஏற்றுக்கொண்டு, உங்கள் திட்டத்தையோ, யோசனையையோ சற்று மாற்றிக்கொண்டு, பயணிக்கும் திசையைச் சற்றேயோ அல்லது பெருமளவோ திருப்பிக் கொண்டு மேற்கொண்டு முயலும் மனோதிடம் வேண்டும்.

தொழில்நுட்பம் தேவைப்படும். அந்த உன்னத நுட்பத்தை உருவாக்க முடியாமல், தேவைப் படுமளவு பலன் கிட்டாமல் போகலாம்.

இரண்டாவது, வணிக ரீதியாக இடைஞ்சல். எதிர்பார்த்த அளவுக்கு நிறுவனத்தின் விற்பொருளுக்கான தேவை, வாடிக்கையாளர் வரவேற்பு மிகக்குறைவாக இருக்கக் கூடும்.

மூன்றாவது, செயல்பாட்டு இடைஞ்சல் (execution risk). அதாவது, ஓரளவு வாடிக்கையாளர் வரவேற்பு இருந்தாலும், உற்பத்திச் செலவைக் குறைக்க முடியாமல், லாபம் கிட்டும் வழியை எட்ட முடியாமல் போகலாம். அல்லது விற்பனை அல்லது வணிகத் திறமைக்

தோல்வியை ஏற்றுக் கொண்டு, மீண்டும் குதித்தெழுந்து மற்றொரு நிறுவனம் நிறுவியோ, அல்லது மீண்டும் பெரும் நிறுவனப் பதவியில் சேர்ந்தோ, பெரும் வெற்றி கண்டவர்கள் பலர் உள்ளனர்.

குறைபாட்டால் தேவையான வளர்ச்சி இல்லாமல் போகலாம்.

நான்காவது, நிறுவனக் குழுவினருள் உட்பூசல் உண்டாகி நிறுவனமே சின்னா பின்னமாகி விடவும் கூடும்! இத்தகைய உட்பூசல்கள் பலதரப் பட்டவை. இதை மற்றொரு கட்டுரையில் விவரிப்போம்!

இறுதியாக, பிரச்சனை நிறுவனம் சம்பந்தப் பட்டதாக இல்லாமல் பொருளாதார சூழ்நிலையால் ஏற்படக்கூடும்:

டாட் காம் குமிழி வெடிப்பு, அல்லது 2008-இல் நிகழ்ந்த வீட்டுக்கடன் உருகல் (home mortgage meltdown) போன்ற நிகழ்வுகளால் மூலதனத்தார், நிதியளிப்புகளை ஒரேயடியாக நிறுத்தி விடுவது, அல்லது வாடிக்கையாளர் பொருள் வாங்குவதை வெகுகாலம் தள்ளிப் போடுவது போன்ற நிலைமைகளால் நிறுவனத்தில் முழுமையாக நிதி வறட்சி ஏற்படலாம்.

இவைபோன்ற கடும் இடைஞ்சல்களால் நிறுவனம் முழுத் தோல்வியை அடைந்து, அதை மிகக் குறைந்த விலைக்கு விற்கும் நிர்ப்பந்தமோ அல்லது அதுகூட முடியாமல் ஒரேயடியாக மூடிவிடும் நிலையையோ அடையக் கூடும். அத்தகைய தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் ஆரம்பத்திலேயே இருக்க வேண்டும்.

"எது வந்தாலும் ஏற்றுக் கொண்டால் துணிவே துணையாய் மாறும்" என்னும் திரைப்பாடல் வரி ஞாபகம் வருகிறது!

அவ்வாறு தோல்வியை ஏற்றுக் கொண்டு, மீண்டும் குதித்தெழுந்து மற்றொரு நிறுவனம் நிறுவியோ, அல்லது மீண்டும் பெரும் நிறுவனப் பதவியில் சேர்ந்தோ, பெரும் வெற்றி கண்டவர்கள் பலர் உள்ளனர். மூலதனத்தாரும் தோல்வியுற்ற தொழில்முனைவோர்களைத் தள்ளி வைப்பதில்லை. அவர்கள் தோல்வியில் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதைத்தான் விசாரிப்பார்கள்.

அதனால் தோல்வி நேர்ந்தாலென்ன, அதன் பிறகு வேறு வெற்றி காண்போம் என்று துணிவொடு களத்தில் இறங்க வேண்டும்!

இத்தோடு முதல் நிபந்தனையைப் பற்றிய விளக்கத்தை முடித்துக் கொள்கிறேன். அடுத்த நிபந்தனையைப் பற்றி அடுத்த பகுதியில் விவரிப்போம்.

(தொடரும்)

Sophisticated family Dentistry
DR.KALAI



- Single-visit root canals
- Cosmetic dentistry-bleaching, bonding, veneers
- Complicated extractions
- Crowns, bridges, partial dentures
- Most insurance plans accepted & payment plans offered
- Hindi, Tamil also spoken

Dr. Kalai DDS,
Univ. of Pacific, S.F.
10 Years Experience
Evening and Saturday appoinments

State-of the art Equipment
- Digital X-rays for Reduced Radiation
- Panoramic X-rays to View Jaw Joints
- Intra Oral Cameras
- Ultrasonic Scalers
- Weekly Monitoring of Sterilizers (to exceed regulatory standards)



408.735.7161
Fax: 408.735.7173
Wrightmont Professinal Center
990 W Fremont Ave, Ste Y, Sunnyvale, CA 94087

Reach communities
Local & Nationwide effectively

ADVERTISE IN THENDRAL

The Pride of
Asian Indian Publications
- in our 25th year

408.245.0193
thendral@tamilonline.com

Immigration Physicals



Manjari Aravamuthan, MD, PC
Board Certified
Internal Medicine & Primary Care

Tel: 408.929.6922
1569 Lexann Ave., #220
San Jose, CA 95121
We accept Medicare, PPO, HMO, Medicare Advantage

www.sanjoseInternist.com



SUJATHA SHANKAR MD
RASHIDA SAIF MD
ASSOCIATE
Board Certified Pediatricians
We care for Infants, Children, and Adolescents

***** Two Convenient Locations *****

77 Brunswick Woods Dr
East Brunswick, NJ 08816
732.238.6644

208 Bldg 'D', Bridge St
Metuchen, NJ 08840
732.548.8877

New Patients Welcome
Free Prenatal Consultation
Same Day Sick Appointments

We accept all insurances

We are very fluent in Tamil, Kannada, Telugu, Hindi and Gujarati

Admitting privileges in St Peter's, RWJ, and JFK Medical Centers

எங்கள் அக்கறை, உங்கள் குழந்தைகள் நலனில்

சிறுகதை

எது சுகம்?

திருச்சியில் அன்று நல்லமழை. அன்று ஞாயிற்றுக்கிழமை. மகாலிங்கம் நல்ல விடுமுறை மூடில் இருந்தார். மாலை அந்த மழையிலும் குடைபிடித்துக் கொண்டு காலார வாக்கிங் சென்று வந்தார். சரி, இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு டிவி பார்த்துவிட்டுத் தூங்கப் போகலாம் என்று நினைத்துக் கொண்டார்.

திடீரென ஒரு ஃபோன். அவரது ஆபீஸ் G.M. பேசினார். "மகாலிங்கம், நீங்க உடனே கிளம்பி மும்பைக்குப் போகவேண்டும். நாளை காலையில் 10 மணிக்கு ஹெட் ஆபீஸில் ரிவ்யூ மீட்டிங்" என்றார். "சார் அதற்குத்தான் சுரேஷ் டிஜிஎம் போகிறாரே" என்று மகாலிங்கம் சொல்ல அவர், "இல்லைப்பா, சுரேஷுக்குத் திடீரென உடம்பு சரியாக இல்லை. அவரால் போகமுடியவில்லை. அவருக்கு பதில் நீங்கள் போகணும். கிளம்புங்க" என்று சொல்லி வைத்துவிட்டார்.

மகாலிங்கம் திருச்சி கிளையின் சீனியர் மேனேஜர். பழுத்த அனுபவசாலி. எப்பொழுதும் தனது ஆபீஸ் பையில் தன் கிளையின் அறிக்கைகள் எல்லாவற்றையும் லேப்டாப்பிலே தயாராக வைத்திருப்பார். அதனால் மீட்டிங்கிற்குச் செல்வதில் ஒரு பிரச்சனையும் இல்லை. மேலும் சுரேஷுக்கு உடம்பு சரியாக இல்லை என்பதால் இதிலிருந்து தப்பிக்கவோ, இதைத் தவிர்க்கவோ முடியாது.

அடுத்த பத்து நிமிடத்தில் ஆபீஸ் டிராவல் ஏஜென்சி அவருடைய சென்னை - மும்பை விமான டிக்கெட், மறுநாள் காலை விமானத்திற்கு, இமெயிலில் அனுப்பிவிட்டனர். போனில் "சார் இன்றிரவு திருச்சி - சென்னை ரயில்களில் ரிசர்வேஷன் டிக்கெட் இல்லை. நீங்கள் திருச்சி ஜங்ஷனுக்கு இரவு ஒன்பதரை மணிக்கு வந்துடுங்க. எங்க ஊழியர் அங்கு வந்துவிடுவார். உங்களை ஏதாவது டிடிஆரிடம் பேசி, பத்திரமாக ஏற்றிவிடுவார், ரிசர்வ் பர்த் வாங்கிவிடுவார் என்று தைரியம் கொடுத்தார் டிராவல் ஏஜெண்ட்.

வேறு வழியில்லை. ராக்போர்ட் எக்ஸ்பிரஸைப் பிடித்து காலை 4 மணிக்கெல்லாம் தாம்பரத்தில் இறங்கி ஒரு டாக்ஸி பிடித்து மீனம்பாக்கத்துக்கு அருகில் ஒரு ரூம் எடுத்து குளித்துவிட்டு ஆறு மணிக்கெல்லாம் விமான நிலையத்தை அடைந்து 8 மணி விமானத்தில் ஏறிவிடலாம். அவசர அவசரமாக இரவு டிபனை



வெங்கடேஷ்குமார்,
ஆஸ்டின், டெக்சஸ்



அள்ளிப் போட்டுக்கொண்டு திருச்சி ஜங்ஷனை 9.30 மணிக்கு அடைந்தார்.

அங்கு ஏஜென்சியின் ஆள் அன்ரிசர்வ்டு டிக்கெட்டை வைத்துக்கொண்டு இங்குமங்கும் ஓடி எல்லா டிடிஆர்களிடமும் கெஞ்சிப் பார்த்தார், எல்லோரும் கைவிரித்து விட்டனர். சரி, பார்த்துக்கொள்ளலாமென அன்ரிசர்வ்டு பெட்டியில் ஏறிவிட்டார் மகாலிங்கம். கூட்டம் நிரம்பிவழிந்தது. முட்டி மோதி உள்ளே போனார். நிற்கத்தான் இடம் கிடைத்தது. வண்டியும் கிளம்பிவிட்டது.

அவருக்கு இந்த மாதிரிப் பயணத்திலே முன் அனுபவமில்லை. சற்று நேரம் ஆன பின் ஸ்ரீரங்கம் தாண்டியவுடன் மூலை சீட்டில் உட்கார்ந்திருந்தவர் இவரிடம் பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தார். "சென்னைக்குத்தானே" என்று தொடங்கி சம்பாஷணை ஆரம்பித்தது. இவர் பதில் சொன்னவுடன் சூடு பிடித்தது. பிறகு அன்யோன்யம் ததும்பி, நன்றாகப் பேசினர். பிறகு அமர்ந்திருந்தவர் தன்னை இன்னும் கொஞ்சம் சுருக்கிக் கொண்டு "நீங்கள் இப்படி அட்ஜஸ்ட் பண்ணி உட்காருங்க" எனச் சில அங்குலங்கள் இடம் கொடுத்தார்.

இவரையும் சேர்த்து இப்போது ஐந்துபேர் அந்த பெஞ்ச் போன்ற இருக்கையில் உட்கார்ந்திருந்தார்கள். அதிர்ஷ்டவசமாக மகாலிங்கம் போலவே எல்லோருமே ஒற்றைநாடியாக இருந்ததால் சரியாகிப் போனது. லால்குடி தாண்டியதும் எதிரே இருந்த நபர் திரும்ப மகாலிங்கத்திடம் "சார், சென்னை வரையா?" என்ற அதே கேள்வியைக் கேட்க இவரும் "தாம்பரம் வரைதான்" என்று பதிலளித்தார். அவரும் "நான் மாம்பலம் போகிறேன். பெண் வீட்டுக்கு" என்று பயண விவரங்களைக் கூற, இவரும் "நான் தாம்பரத்தில் இறங்கி, ஏர்போர்ட்டுக்குப் போய் மும்பை விமானத்தைப் பிடிக்க வேண்டும்" எனச் சொன்னார்.

மற்றவர்களும் தத்தம் பயண விவரங்களைக் கூற உரையாடல் சூடு பிடித்து இனிமையான அனுபவமாக மாறியது. எதிர்வரிசை நபர்களும் நட்புடன் கலந்து கொண்டனர். அப்போது டீ விற்றுக் கொண்டு வந்தவரிடம் மகாலிங்கம் எல்லோருக்கும் தேநீர் கொடுக்கும்படிச் சொல்லி, தானும் அருந்தினார். மகாலிங்கம் சந்தோஷமாகக் காசு கொடுத்தார், மேலே உள்ள பலகையில் படுத்துக் கொண்டவருக்கும் சேர்த்து டீ வாங்கியிருந்தார். அவரும் அருந்திவிட்டு "சார் நீங்க மும்பை வரைக்கும் தூரமா பயணம் செய்யணுமே, நீங்க மேலே வந்து படுங்க, நான் கீழே வந்துவிடுகிறேன்" என்று தடுத்தாலும் கேட்காமல் இவருக்கு ஒரு படுக்கை பர்த் மாதிரி ஏற்பாடு செய்துவிட்டார். இன்னொரு சக பயணியும் "ஐயா, நீங்க கவலைப்படாம தூங்குங்க, நான் செங்கல்பட்டு தாண்டியதும் எழுப்புகிறேன்" என்றார்.

மகாலிங்கம் ஆச்சரியப்பட்டுப் போனார். முதலில் பெட்டி உள்ளே ஏறமுடியாமல், வழிவிடாமல் தடுத்த இந்தப் பயணிகள், பிறகு எவ்வளவு நன்றாகப் பேசி, உட்காரவும், பின்னர் படுக்கவும் வசதி செய்து கொடுத்துட்டாங்க என நெகிழ்ந்து போனார். ரயில் குலுக்கல் தாலாட்ட அயர்ந்து தூங்கிவிட்டார்.

காலை 4 மணிக்கு அந்தச் சகபயணி இவரைத் தட்டி "சார் எழுந்திருங்க. வண்டலூர் தாண்டிவிட்டது. தாம்பரம் வந்துடும்" என எழுப்பி விட்டார். எல்லோருக்கும் நன்றி சொல்லிவிட்டு ஒரு டாக்ஸி பிடித்து மீனம்பாக்கத்திலே ஒரு ஓட்டலுக்குச் சென்று அறை எடுத்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, குளித்துவிட்டு ஆறரை மணிக்கெல்லாம் ஏர்போர்ட் சென்றடைந்துவிட்டார்.

அங்கு போர்டிங் பாஸ் வாங்கிக்கொண்டு செக்யூரிட்டி சோதனையை முடித்துவிட்டு ஒரு சூடான காபி அருந்தினார். அப்பொழுது அவரிடம் சற்றும் சோர்வு இல்லை. இரவு முழுவதும் ரிசர்வ் செய்யாத பெட்டியில் பயணம் செய்தாலும் அந்தக் களைப்பை, உடன் பயணித்த சாதாரண மனிதர்களின் நட்புணர்வும் கனிவும் அக்கறையும் நீக்கிவிட்டதை உணர்ந்தார். நெடுநேரம் நின்றிருந்ததையும், ஏசி இல்லாததையும், தூங்குவதற்கு மெத்தையில்லாமல் வெறும் பலகையில் படுத்து வந்ததையும் மனதும் உடலும் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மாறாக, உற்சாகம் துளிக்கூட குறையவில்லை என்பதாக உணர்ந்தார்.

போர்டிங் ஆரம்பித்துவிட்டார்கள். உற்சாக மனதுடன் மகாலிங்கம் விமானத்தில் ஏறினார். அன்று அவருக்கு மூன்று இருக்கைகள் கொண்ட வரிசையில் நடு சீட்தான் கிடைத்திருந்தது. அவரது வரிசைக்கு வந்தபோது நடைபாதை ஓர (ஐல்) சீட்டில் பருமனான ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

கையில் ஒரு செய்தித் தாளை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். இவரைக் கண்டுகொள்ளவேவில்லை. மகாலிங்கம் "சார், எக்ஸ்கியூஸ் மீ" என்றார். அவர் துளிக்கூட சிநேகமில்லாமல் பார்த்தார். இவர் அடுத்த சீட் தன்னுடையது என்று சைகை காட்டியபின், 'உச்' என்ற ஒரு சப்தத்துடன், ஒரு முனகலுடன் சற்றே எழுந்து வேண்டா வெறுப்பாக வழி கொடுத்தார். இவரும் தன் உடலை வளைத்து அந்த இடைவெளியில் நுழைய, அவர்மேல் சற்றே உராய்ந்துவிட்டார். இவர் என்ன செய்வார்? குண்டான அந்த நபர் சற்றே வெளியே வந்தால் சுலபமாக இவர் இருக்கைக்குச் சென்றிருக்கலாம். இவர் உராய்ந்ததற்கு அவர்

வெறுப்புடன் ஆங்கிலத்தில் இவரைப்பற்றி ஒரு எதிர்மறையான சொல்லை முணுமுணுத்தார்.

மகாலிங்கம் தன் சீட்டில் உட்கார்ந்ததும் மறுபக்கம் திரும்பிப் பார்த்தார். ஜன்னல் சீட்டில் இன்னொரு பெரிய மனிதர் அமர்ந்திருந்தார். அவரும் அதேபோல் கண்களில் சற்றேனும் நட்புணர்வு இல்லாமல் இவரைப் பார்த்துவிட்டு ஒரே கணத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டார். குறைந்த பட்சம் ஒரு "ஹலோ" அல்லது "குட் மார்னிங்" சொல்லலாம் என்றால் இருவருமே அதை விரும்ப மாட்டார்களெனத் தெளிவாகத் தெரிந்தது.

சில்லென்ற ஏசி, மெத்தென்ற சீட். சரி, சற்றே ஓய்வாகக் கைப்பிடியின் மேலே கைகளை வைக்கலாமென்றால் இரண்டு பக்கக் கைப்பிடிகளையும் பக்கத்து இருக்கை பெரிய மனிதர்கள் தத்தம் கைகளை வைத்து ஆக்கிரமித்திருந்தனர். அதில் ஒருவர் ஒரு விநாடி கையை எடுத்தவுடன் மகாலிங்கம் தன் கையை வைத்துக்கொள்ள அந்த நபர் இவரைப் பார்த்த பார்வை மிக பயங்கரமாக இருந்தது. இதற்குள் விமானப் பணிப்பெண் காலைச் சிற்றுண்டியைக் கொண்டுவந்தாள். மகாலிங்கம் தன் முன்சீட்டின் முதுகிலிருந்த டிரேயை ரிலீஸ் செய்து அவள் கொண்டு வந்த டிபன் தட்டை எதிர்கோக்கிக் காத்திருந்தார். அவள் முதலில் இடது மூலையில் ஜன்னல் பக்கத்தில் இருந்த பயணியிடம் தட்டை நீட்டினாள். அவர் தன் கையை நீட்ட, மகாலிங்கமும் நட்போடு தட்டைத் தான் வாங்கி அவருக்குத் தரலாம் எனக் கையை நீட்டினார். அந்தப் பயணியோ இவரிடமிருந்து தன் தட்டை வாங்குவதைத் தவிர்க்க எவ்வளவு சேஷ்டை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து, இவரை ஏதோ ஒரு ஜந்துவைப் பார்ப்பது போல வெறுப்புடன் நோக்கி, கையிலிருந்து சரேல் எனத் தட்டை வாங்கினார். ஒரு சம்பிரதாயமான "தாங்க்ஸ்" கூடக் கிடையாது.

பிறகு பணிப்பெண் நடுச்சீட்டு மகாலிங்கத்தின் தட்டை நீட்ட வலது புறமிருந்த பயணியோ தன்கையில் அதை வாங்கித் தர முயலாமல், ஏதோ தொற்று நோயாளியின் உணவுத் தட்டைத் தீண்டாமல் இருப்பது போல முகத்தையும் உடலையும் வைத்துக்கொண்டார். தட்டை இவரே வாங்கிக்கொண்டார். உணவு அருந்தியவுடன் மகாலிங்கத்துக்கு பாத்ரூம் போகவேண்டுமெனத் தோன்றியது. வலதுபக்கப் பயணியோ கண்ணை மூடியோக நிஷ்டையில் இருந்தார். இவரும் தயங்கித் தயங்கிக் காத்திருந்தார். அடக்கவே முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது. "சார், எக்ஸ்கியூஸ் மீ" என்று கூப்பிட்டுப் பார்த்தார். அவரோ அசையவேயில்லை. தூக்கமா, பாசாங்கா என்று நினைத்துப் பார்த்தால், அவர் கண் இமைகளை இறுக்கி வைத்திருந்தது தெரிந்தது. 'தூக்கத்திலும் என்ன நடிப்புடா சாமி!' என்றுதான் தோன்றியது. என்னப்பா இது! இவரை நமக்கு முன்னே பின்னே தெரியாது. இவர் ஏன் என்னிடம் இவ்வளவு விரோதம் பாராட்டுகிறார்?

பூர்வ ஜன்மத்தில் இவருக்கு ஏதோ கெட்ட காரியம் பண்ணிவிட்டோம் போல என்ற எண்ணம் மேலோங்கியது, வேறு ஒன்றும் தோன்றவில்லை. ஒரு வழியாக அடக்கமுடியாமல் போனதால் சீட்டிலிருந்து எழுந்து அவருடைய கால்களின் தடையை மீறி என் எண்சாண் உடம்பைச் சுருக்கிக்கொண்டு வெளியே வந்து பாத்ரூமிற்குப் போனார். திரும்ப சீட் வரிசையை நோக்கி நடந்தபோதுதான் அந்தப்

பயணியை தாண்டுவது பாக் ஜலசந்தியை தாண்டுவது போன்ற சாத்தியமற்ற செயல் என்று, நல்ல வேளை கடைசி வரிசையில் ஒரு பாதையோர சீட் காலி இருந்தது. அதில் அமர்ந்து கொண்டார். விமானம் ஒரு வழியாக மும்பை அடைந்தது.

இந்த விமானப் பயணம் எவ்வளவு அசௌகரியமாக அமைந்துவிட்டது என மனம் அயர்ந்தார் மகாலிங்கம். வெளியே வந்து ஒரு டாக்ஸி பிடித்து தலைமை அலுவலகம் போய்ச் சேர்ந்தார்.

ரெவ்யூ மீட்டிங்கும் மும்முரமாக நடந்தது. மகாலிங்கம் தன் கிளையின் செயல்திறன், வர்த்தக வளர்ச்சி, இந்த வருட இலக்குகள் ஆகியவை பற்றி மிகச்சரியாக விளக்கினார். எம்.டி. கேட்ட கேள்விகளுக்கும் மற்ற உயர் அதிகாரிகளின் ஆழமான வினாக்களுக்கும் நேர்த்தியான விடைகளை அளித்தார். மாலை நான்கு மணி அளவில் எம்.டி. தன்னுடைய நிறைவுரையில் திருச்சி கிளையை, குறிப்பாக மகாலிங்கத்தின் விடைகள், விளக்கங்களை, வெகுவாகப் பாராட்டினார். எல்லோரோடைய கைகுலுக்கல்களையும் பெற்றுக் கொண்டார் மகாலிங்கம். மற்ற வேலைகளை முடித்துக் கொண்டு மனிதவளப் பிரிவுக்குச் சென்று, திருச்சி திரும்புவதற்கு பயண ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கேட்டார்.

அங்கு இருந்தவர் "மகாலிங்கம் சார், நீங்க 7 மணி பெங்களூர் விமானத்தைப் பிடித்தால் எட்டரை மணிக்கு அங்கு போய்விடலாம். திருச்சி விமானம் அங்கிருந்து இரவு பத்து மணிக்கு. இரவு பதினோரு மணிக்கு ஊர் போய்ச் சேர்ந்து விடலாம். டிக்கெட் ரிசர்வ் பண்ணிடட்டுமா?" என்று கேட்டார். மகாலிங்கம் சற்றே யோசித்தார்.

என்னதான் இரட்டை விமானப் பயணம் விரைவாக இருந்தாலும், ஏசி குளிர் இதமாக இருந்தாலும், உணவு ருசியாகத் தெரிந்தாலும், இரண்டு பக்கமும் உட்கார்ந்திருந்த பயணிகளை நினைத்தாலே பயமாக இருந்தது. வேண்டாம், சென்னைவரை விமானத்தில், கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், போய்விட்டால் அங்கிருந்து இரவு ரயிலைப் பிடித்தால் திருச்சிக்குப் போய்விடலாம், சிரமமில்லை என்று தோன்றியது அவருக்கு.

உடனே, "இல்லை சார். நீங்க சென்னை விமானத்தில் டிக்கெட் போடுங்க. அங்கிருந்து நான் தாம்பரம் போய் இரவு ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸைப் பிடித்து காலையில போய் திருச்சி சேர்ந்துவிடுவேன்" என்றார்.

அவர் கம்ப்யூட்டரில் பார்த்து, விமான டிக்கெட் உடனே வாங்கிவிடலாம், ரயில்வே ரிசர்வேஷன்தான் கிடைக்கவில்லை. எந்த வண்டியிலும் இடம் இல்லை என்று காண்பிக்கிறது. இரண்டாம் கிளாஸ் பர்த்தோ, சீட்டோகூட இல்லை என்றார். மகாலிங்கம் உடனே "பரவாயில்லை, நீங்கள் சென்னை டிராவல் ஏஜெண்ட் கிட்ட சொல்லி, அவருடைய ஆள் ஒருவரைத் தாம்பரம் ஸ்டேஷனில் போய் ஒரு அன்ரிசர்வ்டு டிக்கெட் வாங்கிட்டு, எனக்காகக் காத்திருக்கச் சொல்லுங்க. நான் விமான நிலையத்திலிருந்து டாக்ஸி பிடித்துப் போய் அவரிடம் டிக்கெட்டை வாங்கிக் கொண்டு, ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸில் ஏதாவது ஒரு அன்ரிசர்வ்டு பெட்டியில் ஏறிவிடுகிறேன்" என்றார். அந்த அதிகாரி "மகாலிங்கம், அன்ரிசர்வ்டு பயணம் கடினம், கும்பலோடு போவதற்குச் சிரமமாக இருக்கும், ரொம்பக் கஷ்டப்படுவீங்க" என்றார்.

SANKARA NETHRALAYA OM TRUST

SANKARA NETHRALAYA & SANKARA NETHRALAYA OM TRUST, INC, USA

SANKARA NETHRALAYA



Smiling ambassadors of Sankara Nethralaya's community eye care

It is boundless joy for Mallika the doting grandma to behold the twinkling smile on her little darling's face again!

Your donations to the SN OM Trust help bring the joy of vision back into the face of millions of poor visually impaired in India

Contributions made by Indians living in the USA helped in performing a very large number of cost free surgeries in year 2018

All contributions to the SN OM Trust are 100% tax exempt in the USA under 501 (C)(3) of IRS

Contact:

Mr. S.V. Acharya, President Emeritus, (855) 4NETHRA - Toll Free, snomtrustusa@yahoo.com

Mr. Bala Reddy Indurti, President, (770) 851-4765, brindurti@gmail.com

Checks may be drawn on Sankara Nethralaya OM Trust Inc. and mailed to Mr. Acharya, 9710 Traville Gateway Drive No.392, Rockville, MD 20850. Donate online : www.sankaranethralayausa.org

இவர் "இல்லை சார், விமானப் பயணம்தான் சிரமம். அன்ரிசர்வ்டு ரயில் பயணம் எனக்கு துளிக்கூட கஷ்டம் இல்லை. நான் ஜாலியாக போய்விடுவேன் என்று சொன்னார். அதை நினைத்தாலே அவர் மனம் உற்சாகமாகி, ஒரு நிம்மதி உணர்வும் தோன்றியது.

சுகம் என்பது நம் மனதில்தான். சக மனிதர்கள் காட்டும் அன்பும், கரிசனமும், நட்பும்தான் என்ற உண்மையைப் புரிந்து கொண்டு அங்கிருந்து விமான நிலையத்துக்குப் புறப்பட்டார்.

வாசகர்கடிதம்

அக்டோபர் மாதத் தென்றல் படித்து மகிழ்ந்தேன். ஹனுமான் அன்ஸ் – திரைப்படம் வந்த சமயத்தில் 'நீம் கரோலி பாபா' பற்றிய கட்டுரை வெளியிட்டது மிகவும் சிறப்பு. அடுத்த பகுதியை எதிர்பார்த்து ஆவலோடு இருக்கிறோம்.

'திருமணங்கள் விமானத்திலும் நிச்சயிக்கப் படலாம்' சிறுகதை ஜென்–z தலைமுறைக்கு ஒத்த கதைதான். விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் பற்றிய தகவல்கள் அருமை. தமிழ்ப் பள்ளிகளில் நாட்டுப்புற நடனம் என்றாலே இவருடைய பாடல்கள்தான் மிளிரும். அனைத்து அம்சங்களும் கொண்ட சிறப்பான இதழ்!

வித்யாலக்ஷ்மி டி, டாலஸ், டெக்சஸ்.

அக்டோபர் தென்றலில் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் நாட்டிற்கும் தமிழுக்கும் ஆற்றியுள்ள பணிகள் படித்து மகிழ்ந்தேன். தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் தென்றலின் யோசனைகள் மிகவும் சரியாக சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

எழுத்தாளர் கல்கியினுடைய மனைவியின் தம்பி உறவு முறைதான் எல்லார்வி என்று தெரிந்தபோது ஆச்சரியமடைந்தேன். அவர் சொந்த முயற்சியில் மறக்க முடியாத, சிறப்பான பெயரும் புகழும் பெற்றிருப்பது அவரது கடின உழைப்பின் அடையாளம்.

அவசரப்பட்டு முடிவு எடுக்காதீர்கள், வதந்திகளால் தடம் மாறிப் போகாதீர்கள் என்று கற்பித்த 'கழுதை இறந்தது' நல்ல படிப்பினை தரும் சின்னக்கதை.

'பரத நாட்டியத்தில் ஒருகுறை' வ.ரா. அவர்களின் மனம் திறந்த வார்த்தைகள் அற்புதம். திருமணத்திற்கான வரன் என்பது இருவழிச்சாலை, கொஞ்சம் விட்டுக் கொடுத்தால்தான் பயணம் நன்றாகச் செல்லும், சமரசம் செய்யத் தயாராக இருந்தால், அதைவிட மதிப்புள்ளதை வாழ்க்கை திருப்பித்தரும் என்ற தத்துவத்தைக் கூறிய 'திருமணங்கள் விமானத்திலும் நிச்சயிக்கப் படலாம்!' என்ற மருங்கர் எழுதிய சிறுகதை அற்புதமானது.



நாட்டுப்புற பாடல்கள் என்றாலே கணீரென்ற குரல் ஒலிக்கும் டாக்டர் விஜயலக்ஷ்மி நவநீதகிருஷ்ணன் அவர்கள்தான் முதலில் ஞாபகத்திற்கு வருவார்.

தென்றலுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

– சசிரேகா சம்பத்குமார், யூனியன் சிட்டி, கலிஃபோர்னியா

நிகழ்வுகள்

நிகழ்வுகள் - நடந்தவை:



சார்லட் முத்தமிழ்ச் சங்கம்: தீபாவளிக் கொண்டாட்டம்

சார்லட் முத்தமிழ்ச் சங்கத்தின் (CMTS) சார்பில் 'தீபாவளிக் கொண்டாட்டம் 2026' என்னும் கோலாகல நிகழ்வை, அக்டோபர் 18, 2026 அன்று, பிற்பகலில் வட கரோலைனா மாகாணத்திலுள்ள மேத்யூஸ் சமூக மையத்தின் ஃபுல்வுட் திரையரங்கில் (Matthews Community Center, Fullwood Theater) சிறப்பாக நடத்தியது. விழாவிற்கு வந்திருந்த பார்வையாளர்கள், குடும்பங்கள், தாயகத்திலிருந்து வருகை புரிந்திருக்கும் பெற்றோர்கள், விருந்தினர்கள் என அனைவரையும் சங்க நிர்வாகிகளும் உறுப்பினர்களும் இன்முகத்துடன் வரவேற்றனர்.

தமிழ்த்தாய் வாழ்த்து, அமெரிக்க நாட்டுப்பண் ஆகியவற்றோடு விழா தொடங்கியது. கலைச் செயலாளர் பிரபு சீனிவாசன் அவர்களது அறிமுக உரைக்குப் பிறகு, சார்லட் முத்தமிழ்ச் சங்கத் தலைவர் பிரகாசம் அண்ணாமலை வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து செயற்குழு உறுப்பினர்கள் உரையாற்றினர். பின்னர்,

தென்றல்



புதிய செயற்குழு உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இவ்வமைப்பில், தலைவர் பிரகாசம் அண்ணாமலை, செயலாளர் கீதாஞ்சலி மாணிக்கவாசகம், பொருளாளர் மோகன்ராஜ் ஆறுமுகம், கலைச் செயலாளர் பிரபு சீனிவாசன், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன் செல்வராஜ், கலைக்குழு உறுப்பினர்கள் ஜமுனா சீனிவாசன், ஆதிமூலம் ரங்கநாதன், ஊடக ஒருங்கிணைப்பாளர் வித்யா ஜெயராமன் ஆகியோர் பொறுப்புகளை வகித்துத் திறம்பட வழிநடத்தி வருகின்றனர்.

சிறார்களின் திறமைகளையும், தமிழர் பாரம்பரியக் கலைகளையும் பறைசாற்றும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. 'தில்லை நடராஜர் பதம்', 'அய்யன் அருள்', 'காளிங்க நர்த்தனம்', 'பாரத வைபவம்', 'நிருத்த வைபவம்', 'ஸ்ரீ ராஜராஜேஸ்வரி' போன்ற ஆன்மிகம், செவ்வியல் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் மெய்சிலிர்க்க வைத்தன. அத்துடன், 'சின்னக் குயில்கள்', 'நின்னுகோரி', 'திரை இசைத் தென்றல்', 'ஸ்லோக பாராயணம்', 'இசைச் சுட்டிகள்', 'சுருதி லயம்' இசைக்குழுவினரின் மெல்லிசை விருந்து முதலானவை நிகழ்ச்சியை மேலும் சிறப்பித்தன.

கிராமிய, திரையிசைக் கலைகளும் இவ்விழாவிற்கு மேலும் வண்ணம் சேர்த்தன. 'சன்பேர்ட்ஸ்', 'நடன விண்மீன்கள்', 'மூர்ஸ்வில் பட்டாம்பூச்சி', 'அழகான ராட்சசி' போன்ற நாட்டுப்புற நடனங்களும்; 'மின்சாரக் கண்ணா', 'பூவிழிகள்', 'குட்டி நட்சத்திரங்கள்', 'அதிரடி சரவெடி', 'குட்டி பட்டாசு', 'ஆரா கேர்ள்ஸ்', 'பிளாஸ்ட் யூ மோட்' போன்ற திரையிசை இணைவு நடனங்களும் அரங்கத்தை உற்சாக வெள்ளத்தில் ஆழ்த்தின. 'எலைட் ஸ்டார்ஸ்' என்ற பாரம்பரிய ஆடை அலங்கார அணிவகுப்பு (Fashion Show) நிகழ்ச்சியும், பங்கேற்பாளர்களை மகிழ்விக்கும் நேரடி விளையாட்டுகளும் சிறப்பாக நடத்தப்பட்டன.



நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பழமைபேசி, மருத்துவர் தணிகையரசு தியாகராஜன் M.D. ஆகியோர் கலந்து கொண்டு, தமிழ்ச்சங்கத்தின் மூன்றாம் ஆண்டு துவக்கம், கலைப்பணிகள், சமூகத்தொண்டு முதலானவற்றைப் பாராட்டியும் வாழ்த்தியும் சிறப்புரையாற்றினர். வருகை தந்த அனைவருக்கும் இலவச அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தென்னிந்தியாவின் பாரம்பரிய உணவு வகைகள் கொண்ட உணவரங்குகளும், கைவினைப் பொருட்கள், உடைகள் அடங்கிய விற்பனை அங்காடிகளும் திருவிழாக் கோலம் பூண்டு காட்சியளித்தன.



மொத்தத்தில், சார்லட் முத்தமிழ்ச்சங்கம் தனது பெயருக்கேற்ப முத்தமிழின் பல்வேறு பரிமாணங்களையும், தமிழர் பண்பாட்டுக் கலைகளும் ஒரே கூரையின் கீழ் ஒருங்கிணைத்துச் சங்கமிக்க வைத்தது அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் இது ஒரு மறக்க முடியாத பண்பாட்டு விருந்தாக அமைந்தது.

கலைச் செயலாளரின் நன்றியுரையோடு 'தீபாவளிக் கொண்டாட்டம் 2026' இனிதே நிறைவுற்றது.

– பழமைபேசி

Thendral Events Calendar



November & December Sundays

9am PST. Robotics & IoT Workshop; Organized by Manaswini Ayala & India Community Center; Venue: India Community Center, Milpitas, California; Contact: www.indiacc.org

November 01, 2026, Sunday

3pm CST. Saravedi 2026; Deepavali Celebrations with traditional dance, drama, pattimandram, humor and culture; Organized by Arizona Tamil Sangam; Venue: Hamilton High School, Chandler, Arizona; Contact: www.aztamilsangam.org

4pm CST. BKM Deepavali Kondattam; Program features Thiruvempavai Invocation Dance by Smt. Divya Unni of Sreepadam Performing Arts and Cultural Education & Studenta, Aadhavan Standup Comedy, Sumptuous Sweets & Food and more; Organized by Bharathi Kalai Manram; Venue: India House, Houston, Texas; Contact: www.bkmhouston.org

November 5, 2026, Thursday

2pm PST. Diwali at the Capitol - celebrating the Festival of Lights at the CA State Capital; Program features speeches by CA State Assembly Members & community leaders; Organized by Mr . Ash Kala, Dr. Darshana Patel, Association of Indo Americans and community partners; Venue: West Side of the California State Capitol (1315 10th St, Sacramento, CA

தென்றல்

தென்றல்





95814 - 10th Street and L Street); Contact: Ramesh Konda

November 07, 2026, Saturday

4:30pm PST. Thanthri Sangamam; Program features Bharathanatyam by Esha Anand - Student and disciple of Guru Aler Krishnan and Abinaya Arts Academy; Carnatic Violin Concert by RK Shriramkumar & VVS Murari, accompanied by Manoj Siva (Mridangam), Anirudh Athreya (Kanjira); Organized by India Fine Arts Academy of San Diego (IFAASD); Venue: Seaside Center for Spiritual Living, Encinitas, California; Contact: www.indianfinearts.org

5pm EST. Carnatic Vocal Concert by Malini Iyer, accompanied by Srihari Vittal (Violin), Aashrith Aravind (Mridangam); Organized by Dhvani - India Performing Arts Society of Central Ohio; Venue: Peggy McConnell Arts Center of Worthington, Worthington, Ohio; Contact: www.dhvaniohio.org

6:30pm EST. Carnatic Vocal Concert by Ashvin Bhogendra, accompanied by Srihari Vittal (Violin) and Vijay Natesan (Mridangam); Organized by Dhvani - India Performing Arts Society of Central Ohio; Venue: Peggy McConnell Arts Center of Worthington, Worthington, Ohio; Contact: www.dhvaniohio.org

Kolam: At the Threshold; featuring Bharathanatyam Performances by students of Abhinaya Dance Company; Organized by Abhinaya Dance Company; Venue: Mexican Heritage Theater, San Jose, California; Contact: www.abhinaya.org









November 08, 2026, Sunday

3:30pm PST. Deepa Jyoth; Program features Carnatic Flute Concert by Amshumanth Murthy, accompanied by Nivik Sanjay Bharadwaj (Violin) and Naveen Basavanhally (Mridangam); Carnatic Vocal Concert by Vignesh Ishwar, accompanied by HN Bhaskar (Violin), Praveen Sparsh (Mridangam), Chandrasekara Sharma (Ghatam); Organized by India Fine Arts Academy of San Diego (IFAASD); Venue: Seaside Center for Spiritual Living, Encinitas, California; Contact: www.indianfinearts.org

November 14, 2026, Saturday

9:30am EST. Annual Deepavali Deepa Puja & Skanda Shashti Celebrations; Organized by Sringeri Vidya Bharati Foundation; Venue: Sri Sharadamba Temple Premises, Stroudsburg, Pennsylvania; Contact: www.svbf.org

11am EST. Deepavali Kondattam 2026; Program features Aadhavan Standup Comedy, grand light music and more; Organized by Michigan Tamil Sangam; Venue: Thurston High School Auditorium, Redford Township, Michigan; Contact: www.mitamilsangam.org

1pm EST. Deepavali Celebrations; Program features Music, Dance & Drama; Organized by Connecticut Tamil Sangam; Venue: Vernon Center Middle School, Vernon, Connecticut; Contact: www.cttamilsangam.org

5pm PST. Carnatic Vocal Concert by Vignesh Ishwar; Accompanied by Sayee Rakshith (Violin), Praveen Sparsh (Mridangam), Chandrasekara Sharma (Ghatam); Organized by South India Music Academy; Venue: Bristol Civic Auditorium, Bellflower, California; Contact: www.simala.net







November 15, 2026, Sunday

4pm PST. Carnatic Vocal concert by Vignesh Ishwar; Accompanied by Sayee Rakshith (Violin), Praveen Sparsh (Mridangam), Chandrasekara Sharma (Ghatam); Organized by South India Fine Arts; Venue: Elizabeth Hangs Theater, Santa Clara Convention Center, Santa Clara, California; Contact: www.southindiafinearts.org

November 20, 2026, Friday

7pm PST. Arpan | Gratitude; Khyal Vocal Music in the spirit of Thanksgiving to the Gurus, Tradition and Audience by Samarth Nagarkar (Vocal), Suhail Yusuf Khan (Sarangi), Shankh Lahiri (Tabla); Organized by India Fine Arts Academy of San Diego (IFAASD); Venue: Seaside Center for Spiritual Living, Encinitas, California; Contact: www.indianfinearts.org

November 21, 2026, Saturday


9am PST. Dikshitar & Shyama Shastri Day; Organized by Organized by South India Music Academy; Venue: Samuel Gompers School, Los Angeles, California; Contact: www.simala.net


Children's Day & Tamil AringnayargaL Day; Organized by Chicago Tamil Sangam; Venue: AD11 Auditorium, College of Lake County, Grayslake, Illinois; Contact: www.chicagotamilsangam.org

Kalakkal Deepavali 2.0 Celebrations; Organized by Greater Portland Tamil Sangam; Venue: Lakeridge High School, Lake Oswego, Portland; Contact: www.gptm.org

November 22, 2026, Sunday

11am EST. Grand Deepavali Celebrations; Program features Live Symphony and Tamil Film Music Orchestra by Music Students from 5th to 12th grade; Organized by New Jersey Tamil Sangam; Venue: TBD; Contact: www.njtamilsangam.net






சின்னக் கதை



நொண்டிச் சாக்குகள்

ஒருமுறை கிருஷ்ணனும் அவனது தோழர்களும் ஒரு வீட்டிற்குள் சென்று தயிர்ப் பானையைக் கீழே இறக்கினர், அப்போது வீட்டின் எஜமானி உள்ளே வந்தார் "நீ ஏன் உள்ளே வந்தாய்?" என்று கிருஷ்ணனைக் கேட்டாள். "என் அம்மாவின் கையில் ஒரு கம்பு இருந்தது, அதற்கு பயந்து இங்கே ஓடி வந்தேன்" என்று கிருஷ்ணன் பதிலளித்தான். "யார் இந்தப் பையன்கள்?" என்று கேட்டாள். "நான் சொல்வது உண்மை என்று சாட்சி அளிக்க அவர்களைக் கூட அழைத்து வந்தேன்" என்றான். "அந்தப் பாத்திரத்தை ஏன் உன் கால்களுக்கு இடையில் மறைத்து வைத்தாய்?" என்று அவள் போலிக் கோபத்துடன் கேட்டாள். "இந்தப் பையன்கள் வெண்ணெயை எடுக்கக்கூடாது என்பதற்காக" என்றான்.

"கிருஷ்ணா, நீ ஏன் வீடு வீடாகச் சென்று அங்கிருக்கும் வெண்ணெயை எடுத்துத் தின்கிறாய்?" என்று யசோதா கேட்டார். "நானே தேர்வு செய்யும் விஷயங்களை மட்டுமே நான் விரும்புகிறேன்; எனக்கு இன்னொருவர் ஊட்டினால் பிடிக்காது" என்று பதிலளித்தான் பாலகிருஷ்ணன். அவனுடைய வழக்கம் இதுவென யாரும் நிர்ணயிக்க முடியாது. அவன் சர்வவியாபி (எல்லா இடங்களிலும் இருப்பவன்); அவன் பக்தவத்சலன் (பக்தர்மீது கருணை கொண்டவன்).



பகவான்
ஸ்ரீ சத்ய சாயி பாபா

நன்றி: சனாதன சாரதி, ஆகஸ்ட் 2026

DAILY LUNCH SPECIALS

Chaat House

Catering for your special occasion is our specialty

FOOD FOR YOUR SOUL

Serving Authentic Indian Snacks & Veg. Thali

SNACKS & REFRESHING DRINKS

CELEBRATING 11 YEARS IN INDIAN CUISINE & CHATPATE SNACKS





10 FRESH ROTS FOR $3.50






Now Serving You at 4 Convenient Locations

- 889, E. El Camino Real, Sunnyvale, CA 94087 Ph: **408.733.9000**
- 939. W. El Camino Real, Sunnyvale, CA 94086 Ph: **408.733.1111**
- 46465. Mission Blvd., Fremont, CA 94539 Ph: **510.505.9999**
- 21267 Stevens Creek Blvd, Cupertino, CA 95014 Ph: **408.973.0460**

www.chaatus.com



தென்றல்

Classifieds



*For subjects of Tamil lineage, residing in the US, matrimonial classified listings are **FREE**, as a service to the community, at this time.*


For all others - **$25** for 20 words; **$0.25** for every additional word. Make checks in favor of '**Thendral**'

Send classified text by email to **thendral@tamilonline.com** with subject - Matrimony Classifieds Send email for guidance & details. No phonecalls, please.

http://tamilonline.com/thendral/classifieds.aspx









Reach communities Local &
Nationwide effectively

Advertise In Thendral


The Pride of Asian Indian Publications - in our 26th year

408.245.0193 ● thendral@tamilonline.com









VELMONT

SPIRITUAL CENTER

SAN FRANCISCO BAY AREA



NOW VELMONT IS

OPEN EVERY SUNDAY

10:00 AM to Noon

for visitors.

A PLACE FOR SPIRITUAL GROWTH AND INNER PEACE

All are Welcome

CONNECT WITH TRADITION, CULTURE AND COMMUNITY

Contact: Contact@velmont.org

Phone: 925-385-6225

SPIRITUALITY • SERVICE • COMMUNITY

New India Bazar

Visit

www.NewIndiaBazar.com

For the location nearest you.



All Major
Credit Card Welcome!

DISCOVER · MasterCard · VISA · AMERICAN EXPRESS

WE ACCEPT EBT CARDS/SNAP BENEFITS AT EACH OF OUR LOCATIONS

NOW OPEN
INDIAN VEGETARIAN STREET FOOD
PLEASANTON LOCATION

OPEN 7 DAYS

Serving the San Francisco Bay Area at 7 Convenient Locations

New India Bazar now ships groceries anywhere within the United States at unbelievable prices! Please email your order to **customersupport@newindiabazar.com**

www.newindiabazar.com ***Your One-stop Friendly Neighborhood Grocery Store***

Best Quality ▪ Friendly Service ▪ Unbeatable Prices

FRESH MADE SWEETS AND ROTI PARATHAS Available Every Day